விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 146 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (14.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் சிரமதானமும் கஞ்சி பரிமாறலும்



19

## இளம் குடும்பப் பெண் வவுனியாவில் சுட்டுக்கொலை

### சந்தேகநபரும் உயிர்மாய்ப்பு

### ஒருதலைக்காதல் என சந்தேகம்



(வவுனியா)
வவுனியா நீலியாமோட்டைப் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று உள்ளூர் தயாரிப் பான இடியன் துப்பாக்கி யால் சுட்டுப் படுகொலை

19

## முல்லையில் சிறுமியை கடத்த முயற்சி

### இளைஞன் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் இரு இளைஞர்கள் இணைந்து சிறுமி ஒருவரை கடத்த முயற்சி மேற்கொண்டுள்ளனர்.
இச்சம்பவத்தில் சந்தேகநபரான இளைஞ ரொருவரை மக்கள் பிடித்து பொலிஸாரி டம் ஒப்படைத்துள்ளனர்.

19

## சிறந்த எதிர்காலத்துக்கு சரியான சட்டம் அமுலாக்க வேண்டும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்காக சரி யான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
துறைசார் மேற்பார்வை குழுக்களின் இளைஞர் பிரதிநிதிகளை தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி

19

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)
வவுனியா - வேப்பங் குளம் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் இளை ஞன் ஒருவர் பலியாகி னார்.
இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.
நெளுக்குளத்

19

## ஜனாதிபதியின் உத்தரவை மீறி தொல்லியல் திணைக்களம் அடாவடி

### உருத்திரபுரம் சிவன் ஆலயம் தொடர்பில் சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)
நாட்டின் நல்லிணக்கம் இன ஒற்றுமைக்கு ஆபத்தை ஏற்படுத் துவதை உடனடியாக நிறுத்துங் கள் என ஜனாதிபதி உத் தரவிட்டுள்ள நிலையில்

02

## அரசுக்கு எதிராக கலகம்

### கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

(கொழும்பு)
கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தின மிரவு முதல் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.
கொழும்பு பல்கலைக்கழ கத்தை அண்மித்த பகுதியில் சில தரப்பினரால், அரசாங்கத் திற்கு எதிராக திட்டமிட்ட வகையில் அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையிலான தயார் நிலை காணப்படுவதாக கிடைக்கப் பெற்ற புல னாய்வுத் தகவலை

19

## தமிழரசுக் கட்சி யாழ் அலுவலகத்தில் குழப்பம்

### ஒருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)
தமிழரசுக் கட்சியின் கூட் டத்தின்போது இரு கட்சி உறுப் பினர்கள் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் குழப்பநிலை ஏற் பட்டிருந்தது.
மார்ட்டின் வீதியில் அமைந் துள்ள தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று கட்சி யின் கூட்டம் நடைபெற்றது.
இதன்போது இரு உறுப்பி னர்களுக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு

## வரியை குறைக்க

### அரசு அவதானம்

(கொழும்பு)
வருமானத்தின் மீதான வரியைக் குறைப்பதில் அர சாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### எதிர்ப்பையடுத்து திருமலையில்

## தடுத்து நிறுத்தப்பட்ட புத்தர் சிலை விவகாரம்

(திருகோணமலை)
திருகோணமலை மாவட் டத்தில் இன்று முன்னெடுக் கப்படவிருந்த தாய்லாந்து நாட் டினைச் சேர்ந்த பௌத்த மத தலைவர்களது சடங்கானது இடமாற்றப்படுவதாக அறி விக்கப்பட்டது.
மேலும் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையை தடுக் கும் நோக்கில் குறித்த நிகழ்வு இரத்துச் செய்யப்பட் டதாக தெரிவிக்கப்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு விமானத்தை பரிசாக வழங்கிய ஆஸி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் முன்னாள் றோயல் அவுஸ்திரேலிய விமானப்படையின் விமானத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு பரிசாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பெள் ஸ்டீபன்ஸ், பீச்கிராப்ட் KA350 விமானத்தை வழங்கும் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார். பீச்கிராஃப்ட் கேஏ350 கிங் ஏர் ஒரு நவீன இரட்டை எஞ்சின் டர்போபிராப் விமானமாகும். "இந்தப் பரிசு இலங்கையின் கடல்சார் பாதுகாப்பைப் பாதுகாக்கும் திறனை வலுப்படுத்தும். இது நாடுகடந்த குற்றங்களுக்கு எதிரான எங்கள் நெருங்கிய ஒத்துழைப்பின் மேலும் ஒரு நிரூபணமாகும்" என உயர்ஸ்தானிகர் டுவிட்டர் மூலம் தெரிவித்தார். (ம-7,9)

# பால்மா விலை குறைப்பு இறுதி தீர்மானம் நாளை

(கொழும்பு)

பால்மா விலை குறைப்பு குறித்து இறுதி தீர்மானம் .இதுவரை எடுக்கப்படவில்லை என பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பால் மா இறக்குமதியாளர்கள் மேலும் கூறுகையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந் துரையாடிய போதிலும் குறைக்கப்பட்ட விலைகள் அல்லது திகதிகள் குறித்து உறுதியான முடிவு எட்டப்படவில்லை.

நாளை திங்கட்கிழமை விலை குறை ப்பு தொடர்பில் மீண்டும் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை எட்ட எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (ம-7,9)

# வாக்காளர் டாப்பு விவகாரம் கிராம உத்தியோகத்தர் கைது

மாணவர் ஒருவரை பாடசாலைக்கு அனுமதிப்பதற்காக வாக்காளர் பெயர் பட்டியலில் பெயரை உள்ளீர்ப்பதற்கு 70 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற, குப்பியாவத்தை - மேற்கு கிராம உத்தியோகத்தர் இலஞ்ச ஒழிப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர் மற்றும் அவரின் மனைவியின் பெயரை 2023 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளீர்ப்பதற்காக தலா 10 ஆயிரம் ரூபாவை குறித்த கிராம உத்தியோகத்தர் இலஞ்சமாக பெற்றுள்ளார்.

அத்துடன், அந்தப் பெயர்களை கணினிமயப்படுத்தி அதன் உறுதிப்படுத்தலை வழங்குவதற்காக 50 ஆயிரம் ரூபாவையும் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக குறித்த பெற்றோரிடம் இருந்து அவர் 80 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், 70 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்ட போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ம-7,9)


## MATHS CLASSES (Girls)

தரம் 06 - 11 வரையிலான பெண் மாணவர்களுக்கு

- தமிழ், ஆங்கில மொழிமூலம்
- குழு, தனி வகுப்பு
- பாடசாலை பெண் ஆசிரியையினால்
- தனி மாணவர் கவனம் மற்றும் வினா, விடை மீட்டல்

(C-6549)

077 621 1056


## ஜனாதிபதி...

எதிர்வரும் 18ம் திகதி உருத்திரபுரீஸ்வரர் காணியை அளவீடு செய்ய தொல்லியல் திணைக்களம் முயற்சித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்விடயத்தை அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 9ம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் என்னால் ஒரு முக்கியமான விடயம் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பாக வடக்கு கிழக்கில் தமிழர்களது பூர்வீக நிலங்களில் இந்து சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டும், சொரூபங்கள் அகற்றப்பட்டும் சில கத்தோலிக்க தேவாலயங்கள் அழிக்கப்பட்டும் அந்த இடங்களிலே புத்த விகாரைகளும், புத்த சிலைகளும் நிறுவப்படுகின்ற மிக முக்கிய விடயத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தேன்.

அன்றைய தினம் கச்சதீவு உட்பட 66 விடயங்களை ஆவண ரீதியாக பாராளுமன்றத்தின் மேசைக்கு கொண்டு சென்று பாராளுமன்றத்திலும் உரையாற்றியிருந்தேன். தமிழர் பிரதேசங்களில் இந்த விடயம் தமிழர்களை பாதிக்கின்றது எனவும், இது மோசமான விடயம் எனவும் அன்றைய தினம் உரையாற்றியிருந்தேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதிக்குமிடையிலான பேச்சுவார்த்தையின் போதும் ஜனாதிபதியிடம் கையளித்து விடயத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றோம்.

நீங்கள் ஏன் இவ்வாறான விடயங்களை கையாளுகின்றீர்கள் எனவும்; அரசாங்கம் காசு அனுப்பாமல் எவ்வாறு பிக்குமாரின் காசுகளில் இந்த விடயத்தை கையாள முடியும் உள்ளிட்ட வினாக்களை எம்முன்னாள் தொல்பொருள் திணைக்களத்திடம் ஜனாதிபதி வினாவினார்.

இது நாட்டின் நல்லிணக்கத்திற்கும், இன ஒற்றுமைக்கும் ஆபத்தானது எனவும் அதனை உடனடியாக நிறுத்துங்கள் எனவும் 85ம் ஆண்டுக்கு முன்னரான வரைபடத்தை வைத்துதான் முடிவுகள் எட்ட முடியும் என நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க கட்டளையை வழங்கியிருந்தார்.

அவரது உத்தரவு சொல்லின் ஒலி மறைவதற்குள் எதிர்வரும் 18ம் திகதி கிளிநொச்சி உருத்திரபுரத்தில் இருக்கின்ற உருத்திரபுரீஸ்வரர் காணியை பௌத்த விகாரை அமைப்பதற்காக அளப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றார். (ம-7,9)

## தமிழரசுக்...

டுள்ளது.

ஒரு உறுப்பினர் மற்றைய உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு தாக்குதலில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7.9.33)


## வெளிநாடுகளுக்கு சட்டரீதியாக செல்வதற்கு

இந்தியா விசா மற்றும் லண்டன், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான சகல விசாக்களும் விரைவாக செய்து தரப்படும்.

பாதுகாப்பன பயணங்களை மேற்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Hybrid international hub pvt ltd, Jaffna

076 250 0098, 021 222 1265

077 815 5920 (C-6542)

## வேலையாட்கள் தேவை

K.K.S Road Kondavil இல் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- கொத்து, Rice போடுபவர்
- பெண் - உணவு பரிமாறுபவர்
- பெண் - சமையல் உதவியாளர்

நேர்முகத் தேர்வு : 4.00 - 5.00

(C-6545)

077 804 2561

## மூக்குக்கண்ணாடி விற்பனையாளர் தேவை

25-45 வயதுக்குட்பட்ட O/L தகைமையுடைய மூக்குக் கண்ணாடி விற்பனையாளர் (பெண்கள்) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

(15511)

077 276 7236


## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1916 . 03 . 22

ஆண்டவன் அடியில் 2008 . 04 . 30



### அமரர் இராமலிங்கம் பொன்னுத்துரை

(தம்பி ஐயா - மண்டைதீவு 6)

திதி : அபரபட்ச தசமி

எந்தையே! எமது அன்புத் தந்தையே!
தந்தையாய், தாயாய் தட்டிக் கொடுத்து
எம்மை தரணியில் வாழ வைத்தீர்!
நல்லன பல சொல்லி நலமாய் வாழ வைத்தீர்
உயர்வான வாழ்வுக்கு உரமாய் நின்று
உவகை கொண்டீரே!
ஒரு நொடிப்பொழுதில் காலன்
வந்துங்களை கவர்ந்து சென்றானே!
நாட்கள் மாதங்களாய், ஆண்டு பதினைந்து
வந்ததையா! ஐயாவே! - நாம்
வாழும் வரை உன் நினைவுடனே
வாழ்வோம் தெய்வமே!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

50, சபாபதி லேன், தலையாழி;
யாழ்ப்பாணம்.

நின் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்

(15516)


## பதவி வெற்றிடம்

முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலரும்)

வயது - 25 வயதுக்கு மேல்

தகைமை - உயர்தரம் கற்றிருத்தல்

குறிப்பு - யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு :

076 097 3121


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலக்கு வைக்கப்படும் வழிபாட்டுத் தலங்கள் இதுவும் தமிழர்களுக்கு எதிரான கலாசார இன அழிப்பே

## ஒன்ராரியோ பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம்

(ஒன்ராரியோ)

இலங்கை சுதந்திரமடைந்த திலிருந்து தமிழ் மக்கள் திட்டமிட்ட இன அழிப்புக்கு முகங்கொடுத்து வருவதுடன், அது தற்போதும் இடம்பெற்றுவருகின்றது என கனடாவின் ஒன்ராரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தமிழினப்படு கொலை அறிவூட்டல் வாரம் நேற்று முன்தினம்ஆரம்பமானது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் பதிவாகி வரும் அண்மையகாலச் சம்பவங்கள் தமிழ்மக்களின் வழிபாட்டுத்தலங்கள் அரசாங்கத்தினால் இலக்குவைக்கப்படுவதைப் புலப்படுத்துவதுடன் இது தமிழ்மக்களுக்கு எதிரான "கலாசார இன அழிப்பு" ஆகும்.

அதேவேளை ஒன்ராரியோவில் வாழும் தமிழ்மக்கள் பல தலைமுறைகளாக இடம்பெற்ற இனவழிப்பினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன், அதன் வடுக்களின் தாக்கத்தைத் தற்போதும் எதிர்கொண்டுவருகின்றனர்.

எனவே தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டத்தை முக்கியமாகக் கருதுவது முன்னெப்போதையும்விட இப்போது அவசியமானதாக மாறியுள்ளது. எனவே தமிழினப்படு கொலை குறித்து அறிந்துகொள் ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்ளும் அதேவேளை, நாமனைவரும் இணைந்து இத்தகைய இனப்படுகொலை மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார். (நி)

# இலங்கையில் பெரும் ஆபத்தாக மாறும் டெங்கு நோய்!

## மூன்றாவது திரிபு குறித்து மருத்துவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**டெங்கு வைரஸ் தொற்றின் மூன்றாம் திரிபு (DENV-3) பரவுகை அதிகளவில் இடம்பெற்று வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் சிறுவர் நல நிபுணத்துவ மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**



இதற்கு முன்னர் டெங்கு இரண்டாம் திரிபு பரவியதாகவும் தற்பொழுது புதிய மூன்றாம் திரிபு பரவி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

டெங்கு வைரஸ் மனிதருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்று.

இந்த நோய்த் தொற்று ஏற்பட்டவர்களில் பலருக்கு நோய் அறிகுறிகள் தென்படுவதில்லை.

மிதமான டெங்கு காய்ச்சலினால் மரணம் சம்பவிக்கும் சாத்தியங்கள் உண்டு.

மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் இரத்த பரிசோதனை செய்ய வேண்டுமெனவும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (நி)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு திருமலையிலும் முன்னெடுப்பு



(திருமலை)

திருகோணமலை சிவன் கோவிலடி பகுதியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வலி சுமந்த காலத்தில் உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றை தொடர்ந்தும் இளைய சமூகத்தினருக்கு கடத்தும் நோக்கில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் வல்வெட்டித்துறை ஆலடிச் சந்தியில் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் என பல்வேறு பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தலை இலக்காக கொண்டே தமிழ் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருந்தால் அதில் எவ்வித சிக்கலும் இல்லை.

நாம் அதிகாரப்பகிர்வை எதிர்ப்பவர்கள் அல்லர். ஆனால், தேர்தலை இலக்காகக் கொண்டே வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார் என்றால் அது நியாயமற்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கும், வடக்கு - கிழக்கு பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் அதிகாரப்பகிர்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி குறித்த பேச்சுவார்த்தை தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வினவியபோது பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜேலால் டி சில்வா இதனை தெரிவித்தார்.

அவர்மேலும்குறிப்பிடுகையில்,

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டது. கட்சி ரீதியாக அழைப்பு விடுக்கப்படாமை தவறாகும். எவ்வாறிருப்பினும், இவ்வாறானதொரு அழைப்பு கிடைக்கப் பெற்றவுடனேயே அவர் கட்சி தலைமைத்துவத்துக்கு இது தொடர்பில் அறிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரம் பகிரப்படுவதை எதிர்க்கும் கட்சியல்ல. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையில் வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக உணர்வுபூர்வமாக இந்த பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் என்றால் அதில் எவ்வித சிக்கலும் இல்லை.

எவ்வாறிருப்பினும், இனி வரும் காலங்களில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை மறைமுக நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதி இந்த பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்துள்ளார் என்ற நிலைப்பாடே பரவலாக காணப்படுகிறது. உண்மையில், இதுதான் ஜனாதிபதியின் நோக்கம் எனில் எம்மால் அதற்கு இணங்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால் இலகுவாக வெற்றி பெற முடியும் என்ற எண்ணம் காணப்படலாம். இவ்வாறு ஜனாதிபதியின் இலக்கு தேர்தல் வெற்றி என்றால் அது நியாயமற்றதாகும் என அவர் தெரிவித்தார். (நி)

# நாட்டை வந்தடைந்த அதிசொகுசு கப்பல்

(கொழும்பு)

கொரோனா தொற்று பேரிடரின் பின்னராக கடந்த சில மாதங்களாக பல நாடுகளிலிருந்தும் சுற்றுலா கப்பல்கள் இலங்கை நோக்கி வருகை தந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் 420 சுற்றுலா பயணிகளுடன் மற்றுமொரு கப்பல் இலங்கையை நேற்று வந்தடைந்துள்ளது.

MS Europa-2 எனும் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். (நி)

# வெளிவிவகார அமைச்சர் சுவீடன் பயணம்



(கொழும்பு)

இந்தோ - பசுபிக் பிராந்திய அமைச்சர்மட்ட மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுவீடன் பயணமானார்.

இரண்டாவது இந்தோ - பசுபிக் அமைச்சர்மட்ட மாநாடு சுவீடனின் ஸ்ரொக்ஹோம் நகரில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய வெளிவிவகார செயற்பாட்டுப் பிரிவுடன் இணைந்து சுவீடனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் இந்தோ - பசுபிக் பிராந்திய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் அமைச்சர் அலிசப்ரி இம்மாநாட்டில் பங்கேற்கவிருக்கும் சுவீடன், ஆஸ்திரியா, டென்மார்க், பின்லாந்து, லத்வியா, நெதர்லாந்து, ரோமானியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் விசேட கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குத்துச்சண்டைப் போட்டி

# ஏழு பதக்கங்களை வென்ற வடமாகாண வீர வீராங்கனைகள்



சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இலங்கையை சேர்ந்த ஏழு வீர, வீராங்கனைகள் பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.

இலங்கை மிக்ஸ் பொக்சிங் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.நந்தகுமார் தலைமையில் சென்ற வீர, வீராங்கனைகள் ஐந்து தங்கப்பதக்கங்ளையும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

உலக மிக்ஸ் பொக்சிங் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பதக்கங்கள் ஊடாக இலங்கை சர்வதேச ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இச்சாதனையை இலங்கை வடக்கு மாகாணத்தில் இருந்து சென்ற வீரர்கள் நிகழ்த்தியுள்ளனர்.

இவர்களின் இச் சாதனையை கௌரவிக்கும் முகமாக வவுனியா கந்தசாமி கோவில் முன்றலில் மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (4-299)

## ஐ.பி.எல் விதிகளை மீறியதற்காக ஜோஸ் பட்லருக்கு அபராதம்

ஐ.பி.எல் தொடரில் கடந்த 11 ஆம் திகதி ராஜஸ்தான் ரோயல்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் பட்டிங் ஆடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்கள் மட்டுமே எடுத்தது.

ராஜஸ்தான் தரப்பில் யுஸ்வேந்திர சாஹல் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். இதையடுத்து 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய ராஜஸ்தான் அணி 13.1 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டுமே இழந்து 151 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர் ஜோஸ் பட்லர் ரன் ஏதுமின்றி அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். இந்நிலையில், ஐ.பி.எல் நடத்தை விதிகளை மீறியதற்காக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஜோஸ் பட்லருக்கு போட்டிக் கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பட்லர் ரன் அவுட் ஆகி பெவிலியனுக்கு திரும்பிய போது கோபத்தில் பவுண்டரி எல்லைக்கோட்டை பட்டால் அடித்தார். இதன் காரணமாக ஐ.பி.எல் நடத்தை விதிகளை மீறியதற்காக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஜோஸ் பட்லருக்கு போட்டிக் கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது. (4)



# இது போன்ற தன்னம்பிக்கை தான் ஒவ்வொரு வீரருக்கும் தேவை

## சூர்யகுமார் யாதவை பாராட்டிய ரோகித்



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 57 ஆவது லீக் போட்டியானது நேற்று முன்தினம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்று முடிந்தது. இந்த போட்டியில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், ஹார்திக் பாண்டியா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதின.

இதில் முதலில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணியானது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 218 ரன்களை குவித்தது. பின்னர் 219 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய குஜராத் அணியானது 20 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 191 ரன்கள் குவித்தது.

இதனால் 27 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. இந் நிலையில் இந்த போட்டி ஒரு சுவாரஷ்யமான போட்டியாக அமைந்தது என மும்பை அணியின் கட்டன் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது. முதலில் பட்டிங் செய்து பெரிய ரன்களை குவித்தால் நிச்சயம் அவர்களை எங்களால் தடுத்து நிறுத்த முடியும் என்று நினைத்தோம்.

அந்த வகையில் நாங்கள் இரண்டாவதாக பந்து வீசும் போது பவர் பிளேவில் சிறப்பாக பந்து வீசி விக்கெட்டுகளை எடுத்தோம்.

ஏனென்றால் போகப் போக பந்துவீச்சுக்கு கடினமான சூழல் ஏற்பட்டது. பனிப் பொழிவு அதிகமாக இருந்ததால் பந்துவீச்சாளர்கள் அதிக ரன்கள் கொடுத்தனர். இருப்பினும் எங்களுடைய செயற்பாடு சிறப்பாக இருந்தது.

சூர்யகுமார் யாதவுக்கு இருக்கின்ற தன்னம்பிக்கை நிச்சயமாக பாராட்டப்பட வேண்டியது. நாங்கள் தொடரின் தொடக்கத்தில் இடது கை வலது கை பட்ஸ்மேன்கள் களத்தில் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினோம்.

ஆனால் இன்று சூர்யகுமார் அடம்பிடித்து தான் களத்துக்கு செல்வேன் என்று உறுதியாக கூறினார். இது போன்ற தன்னம்பிக்கை தான் ஒவ் வொரு பட்ஸ்மேனுக்கும் தேவை.

அவருடைய இந்த தன்னம்பிக்கை கூட இருக்கும் பட்ஸ் மேன்களுக்கும் உற்சாகத்தை கொடுக்கிறது. இது நல்ல விஷயம் என்னவென்றால் ஒவ்வொரு ஆட்டத்தையும் புதிய ஆட்டமாக அவர் தொடங்குகிறார்.

ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் இப்படி த்தான் யோசிக்க வேண்டும். சிலர் நாம் தான் சிறப்பாக விளையாடி விட்டோமே என்ற பெருமையில் இருந்து விடுவார்கள். ஆனால் சூர்ய குமார் அப்படி அல்ல என ரோகித் சர்மா கூறினார்.(4)

## இரண்டாவது ஒருநாள் போட்டி
### அயர்லாந்தை வென்றது பங்களாதேஷ்



அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ஒரு நாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

டாஸ் வென்ற வங்காளதேசம் பவுலிங் தேர்வு செய்தது. மழை காரணமாக போட்டி 45 ஓவராகக் குறைக்கப்பட்டது. அதன்படி, முதலில் பட் செய்த அயர் லாந்து நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 319 ரன்கள் குவித்தது. அந்த அணியின் ஹாரி டெக்டர் பொறுப்புடன் ஆடி சதமடித்தார். அவர் 112 பந்தில் 10 சிக்சர் உட்பட 140 ரன்கள் எடுத்தார். கடைசி கட்டத்தில் அதிரடியாக ஆடிய டாக்ரெல் 47 பந்தில் 74 ரன்கள் குவித்தார். இதையடுத்து, 320 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேசம் களமிறங்கியது. நஜ்மல் ஹொசைன் சிறப்பாக ஆடி சதமடித்து 117 ரன்னில் அவுட்டானார்.

தவ்ஹித் ஹிர்தோய் 68 ரன்கள் சேர்த்தார். இறுதியில், ஆட்டத்தின் கடைசி ஓவரில் வங்காளதேசம் 7 விக்கெட் இழப்புக்கு 320 ரன்கள் எடுத்து வென்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் வங்காளதேசம் 1-0 என முன்னிலை வகிக்கிறது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நன்மையை கருத்திற்கொண்டு

# அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

(கொழும்பு)

**நாட்டின் நன்மையை கருத்தில் கொண்டு ஒரு பொதுவான தீர்மானங்களை எடுப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவினை அரசாங்கத்திற்கு வழங்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தின் துறை சார் கண்காணிப்பு சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட இளைஞர் பிரதிநிதிகளை அறிவிக்கும் செயலமர்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

நாட்டில் சரியான விடயங்கள் நடக்கும் போது அதனை பார்த்துக்கொண்டுஇருக்காது, நல்லதை நல்லது என்று சொல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமது கொள்கை நிலைப்பாடுகள் எவ்வளவுதான் முரண்பட்டாலும் நாட்டின் பொதுக் கடமைக்காக ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டதாக சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

பதவிகளைப் பெறுவதற்காக அல்ல என்றும் நாட்டிற்கு மதிப்பு சேர்க்க வேண்டும் என தெரிவித்த சஜித் பிரேமதாஸ நாட்டுக்காக தேசிய ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்றசெயலாளர்நாயகம் தம்மிக்க தச நாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (4)

# பௌத்த விகாரைக்குள் இந்து தெய்வங்கள்

## படையெடுக்கும் மக்கள்

(கொழும்பு)

சீமா மலாக்கா என்பது இலங்கையின் மிகவும் பிரபலமான கட்டடக் கலைஞர் ஜெஃப்ரி பாவாவால் வடிவமைக்கப்பட்ட ஒரு பௌத்த விகாரையாகும்.

ஏறக்குறைய 120 ஆண்டுகளுக்கு முன்பு, சீமா மாலக்கா கங்காராம கோவிலின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.

ஆனால் எழுபதுகளில் சீமமாலக்கா சிதைந்து நீருக்கடியில் மூழ்கத் தொடங்கியது. இதனை தொடர்ந்து எழுபதுகளின் பிற்பகுதியில் இந்த அமைப்பு முஸ்லிம் வர்த்தகரொருவரின் நன்கொடையால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.

இந்த பௌத்த விகாரையில் பிள்ளையார் மற்றும் விஷ்ணு போன்ற இந்து தெய்வங்களின் சிலைகளும் இடம் பிடித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

இதன் கட்டடக்கலை மற்றும் அமைந்துள்ள தோற்றம்; தெய்வங்கள் உள்ளிட்ட பல விடங்களால் ஈர்க்கப்பட்டு பெருந்திரளான மக்கள் நாள்தோறும் இந்த விகாரைக்கு படையெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# தேசிய அரசாங்கம் குறித்து ஜனாதிபதி பேசவில்லை

## மனோ தெரிவிப்பு

(கொழும்பு)



தேசிய அரசாங்கம் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசவில்லை. முழு பாராளுமன்றமும் அரசாங்கத்திற்காக வேலை செய்ய வேண்டும் என்று தான் கூறினார் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

"தேசிய அரசாங்கம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்துடன் இணைய விரும்புபவர்கள் அவர்களது கட்சியுடன் வந்து சேர முடியும் என ஜனாதிபதி கூறினார்.

அப்படி முடியாதுவிட்டால் தனியே வர முடியும் என்று அறிவித்தார். அப்படியும் முடியாதுவிட்டால் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு வேலை செய்யலாம் என்றார்.

அதற்கான குழுக்களை நிறுவி பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுப்போம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை "உங்களது கட்சி அரசாங்கத்துடன் இணையுமா?" என்ற கேள்விக்கு மனோ கணேசன் பதிலளிக்கும் போது, "அப்படியான தீர்மானம் இல்லை" என்று கூறியுள்ளார். (நி)

# இராசிபலன்

14.05.2023
சித்திரை 31, ஞாயிற்றுக்கிழமை
நவமி காலை 6.00 மணிவரை
தசமி பின்னிரவு 3.49 மணிவரை

சதயம் முற்பகல் 11.32 மணிவரை
சுபநேரம் -8.53-10.23 மணிவரை
இராகுகாலம்-4.23-5.53 மணிவரை
சர்வதேச அன்னையர் தினம்

திருநாவுக்கரசர் குருபூசை
சந்திராஷ்டமம்-
பூசம், ஆயிலியம்

**வளவன்**



மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



கடகம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.



துலாம்

கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.



மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



ரிஷபம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.



சிம்மம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.



விருச்சிகம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.



கும்பம்

சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.



மிதுனம்

மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.



கன்னி

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், கடன்[illegible]



தனுசு

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், போசன சுகமுண்டு.



மீனம்

உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

கடன் கொடுத்துப் பார் நீ எந்தளவுக்கு முட்டாள் என்று உனக்கே தெரியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (படம்: மகாலிங்கம்)

# ஏலவிற்பனை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவி ருந்த பகிரங்க ஏல விற் பனை தவிர்க்க முடியாத காரணத்தினால் ஜூலை 22 ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளதென நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (4)

# பாராளுமன்ற அமர்வுகளை பார்வையிட்ட யாழ்.பாடசாலை மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி நிகழ்வை பார்வையிடச் சென்ற யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்கள் பாராளுமன்ற அமர்வினையும் பார்வையிட்டிருந்தனர்.



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடைய ஏற்பாட்டில் கண்காட்சி நிகழ்வுக்காக யாழில் இருந்து சுமார் 750 பாடசாலை மாணவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இதன்போது பாடசாலை மாணவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரை சந்தித்ததுடன் பாராளுமன்ற அமர்வினையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# விளையாட்டுத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வசதி வாய்ப்புக்கள் அவசியம்

## தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

(சாவகச்சேரி)

விளையாட்டுத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்த வசதி வாய்ப்புக்கள் அவசியம் என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற பாடசாலை அணிகளுக்கு இடையிலான கடினப்பந்து, துடுப்பாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடினப்பந்து, துடுப்பாட்டம் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதென்பது எமது கல்வி வலயத்திற்கு சவால் நிறைந்த ஒன்றாக காணப்படுகிறது. இதற்குக் காரணம் பாடசாலைகளில் மாணவர் தொகை குறைவு மற்றும் போட்டிகளை நடத்துவதற்கான செலவுகள் அதிகமாக காணப்படுகின்றமை.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 58பாடசாலைகள் உள்ள போதிலும் 6 பாடசாலைகளில் தான் கடினப்பந்து அணிக்கான மாணவர் தொகை காணப்படுகிறது.

தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் எமது பிரதேச மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றி வருகின்றது.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான நிதி கூட இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

புலம்பெயர் அமைப்புக்களின் ஒத்துழைப்புடனே இவ்வாறான போட்டிகளை நடத்த வேண்டிய தேவைப் பாடு இருப்பதாக மேலும் அவர் தெரிவித்திருந்தார். (4-30)




# கண்காணிப்பு கமராக்களை திருடியவர் மடக்கிப் பிடிப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குடத்தனை மேற்குப் பகுதியில் தென்னந் தோட்டத்தில் பூட்டப்பட்டிருந்த கண்காணிப்பு காமராக்களை களவாடிய நபரை பருத்தித்துறை பொலிஸார் சுற்றி வளைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மடக்கிப் பிடித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது குடத்தனை மேற்குப் பகுதியில் உள்ள தென்னந் தோட்டம் ஒன்றில் பூட்டப்பட்டிருந்த கண்காணிப்பு ஒளிப்பதிவு கமராக்களை களவாடிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸிற்கு கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு அளிக்கப்பட்டு இருந்த நிலையில் அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த களவு தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்டு வரணிப் பகுதியில் வைத்து களவாடப்பட்ட கண்காணிப்பு கமராக்கள் உட்பட அனைத்து பொருட்களும் மீட்கப்பட்டது.

அத்துடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரையும் சான்றுப் பொருட்களையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-60)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு ஆண்கள் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பத்திரகாளி கோவில் பகுதியில் வைத்து இருவர் நேற்று முன்தினம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பனிப்புலம், பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரிடமிருந்து 2 1/2 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. அத்துடன் தொட்டிலடி, சங்கானை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது.

இவர்கள் முச்சக்கர வண்டியில்ஹெரோயினை கொண்டு சென்ற வேளையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (4-104)

# போலி விசா; யாழ்.நபர் கைது

(அராலி)

போலியான விசா மூலம் வெளிநாட்டுக்கு செல்ல முயன்ற ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு சட்ட விரோதமாக வெளிநாட்டுக்கு செல்லமுற்பட்ட வேளை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணை [illegible] (4-104)




சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு தாதிய உத்தியோகத்தர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அட்டை வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 397
Viber 076 636 3378



# முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் சாட்சியம்

"முள்ளிவாய்க் கால் கஞ்சியை எம் இளம் தலை முறை ஒரு முறை யேனும் பருகி எம் இனம்பட்ட இன் னலை புரிந்து கொள்ள முற்பட வேண்டும்."

"தமிழினத்தின் தலைவிதி மாண் டவர்க்கு நீதிகி டைக்காமைஎன்ற போது அந்த இனத்தினால் எதைச் செய்து விட முடியும்."

"அம்மா சரியாத் தண்ணி விடாய்க்குது?" "பொறுங்கோ மகள். செல் அடி அமோகமாகக் கிடக்கு. கொஞ்சம் ஓயட்டும் போய் எடுத்துக் கொண்டு வந்து தாரன்"

" அம்மா ஏதோ முதுகில கடிச்சுப் போட்டுது " " ஆ... கடவுளே எங்கட இனத்தை ஏன் இப்பிடி சோதிக்கிறாய்?" " தாகத்திலை பிள்ளைகள் தவிக்குதுகள். தண்ணி எடுத்து வரக் கூட முடியாத படி செல் மழை பொழியுதே..."

" அம்மா நாக்கு வறண்டு போச்சு...! மயக்கம் வாரமாதிரி இருக்கு..."

" தண்ணி... தண்ணி... தண்ணி..."

மகளின் குரல் ஓய்வதை கண்ணுற்ற அந்த அபலத் தாய் தன் பிள்ளைக்கு நீர் எடுக்க பங்கரை விட்டு வெளியே வருகிறாள்.

அடுப்படி ஓரத்தில் இருந்த குடத்தில் இருந்து செம்பு நிறைய நீரை எடுத்துக் கொண்டு இரண்டு அடிதான் வைத்திருப்பாள்.

பயங்கர சத்தத்துடன் செல் ஒன்று அவள் அருகே விழ்ந்து வெடித்தது.

எங்கும் புழுதி மயம். நீர் எடுக்கச் சென்ற தாய்க்கு என்ன ஆனதோ என்று ஏக்கப் படபடப்புடன் எட்டிப் பார்த்த பிள்ளைகளுக்கு இரத்த வெள்ளத்தில் கிடந்த தாயின் உயிரற்ற உடலையே காண முடிந்தது.

உணவு தேடப் போன தாய்க்குருவி கூடு சேராததால் பசியால் துடித்த குஞ்சுகள் போல முள்ளி வாய்க்கால் அதிரும் படி கத்தினார்கள் அந்தப் பிஞ்சுகள்.

ஏற்கனவே செல்லுக்கு இரையான தந்தையின் இழப்பில் இருந்து மீழும் முன்னரே தம் தாயையும் இழந்த அந்தப் பிஞ்சுகளின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தால் நெஞ்சம் பதை பதைத்துப் போகிறது.

இப்படி ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் உயிரை உருக்கும் உண்மைச் சம்பவங்கள் நிறைந்த இடமே இறுதி யுத்த முள்ளிவாய்க்கால் மண்.

அந்த மண்ணுக்கு மட்டும் வாய் இருக்குமாக இருந்தால் ஐ.நா சபையின் மன்றில் ஏறி ஏய்... சர்வதேசமே எம் இனத்தை திட்டமிட்டு கருவறுத்தவர்கள் இவர்கள் தான். இவர்களுக்கு தண்டனை வழங்காமல் கால அவகாசம் வழங்கிக் கொண்டிருக்கிறாயே.உனக்கு மதி இல்லையா? என்று இந்த உலகமே அதிரும் படி கர்ச்சித்திருக்கும்.

என்ன செய்வது தமிழினத்தின் தலைவிதி மாண்டவர்க்கு நீதி இல்லை என்றான போது எதைச் செய்து விட முடியும்.

இறுதி யுத்தத்தில் இன அழிப்பு நடந்தது என்பதற்கு போதிய ஆதாரங்கள் கிடைத்திருந்தும் இன்று வரை சர்வதேசம் சம்பந்தப்பட்டவர்களுக்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குள் இருக்கும் பெரும் அரசியல் என்ன வென்று கூறிவிட முடியும்.

பயங்கரவாதம் அழிக்கப்படுகிறது எனும் போர்வையில் ஓர் இன அழிப்பே நடந்தேறிய போது சர்வதேசம் அரசாங்கத்திற்கு சாமரை வீசியது எதனால் என்பது தான் தமிழினத்தின் தற்போதைய கேள்வி.மனித உரிமைகள் பற்றிப் பேசும் நாடுகளுக்கு இலங்கை அரசின் மனிதாபிமானம் அற்ற செயல்கள் கண்ணுக்குத் தெரியாமல் போனது என்பது பெரும் வியப்பே.

இந்த நாடு தமிழினத்திற்கும் உரித்துடைய நாடு.இங்கு தமிழினமும் தனது பண்பாடு கலாசாரத்துடன் நிம்மதியாய் வாழ்வதற்கு உரித்துடைய இனம்.

ஆயினும் போர் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்து விட்டன.இன்றுவரை தமிழினத்துக்கு குண்டூசி அளவேனும் சுதந்திரம் கிடைத்ததா என்றால் அதற்கு எவரிடமும் பதில் இல்லை என்பதே உண்மை.



முள்ளி வாய்க்கால் மண் எம் இனத்தின் அழிவுகண்ட சாட்சியாம்.அந்த மண் எம் மக்களின் இரத்தத்தால் குளித்த மண்.

எம் தமிழ் மக்களின் ஆத்மாக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த மண்ணில் நின்று சுடரேற்றி ஒரு துளி கண்ணீரேனும் சிந்துவது எம் இனம் பட்ட பாட்டை சற்றேனும் தணிக்க வல்ல செயல்.

கட்டமைக்கப்பட்ட ஒரு இனம் தன் உரிமைக்காகக் போரிட்டு தோற்றுப் போய் மாண்டு போன வரலாறாய் மாறிவிட்ட முள்ளி வாய்க்கால் முற்றம் கண்ட சரித்திரங்களை எம் இனச் சந்ததிக்கு சொல்லி வளர்த்திட வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமையும் பொறுப்புமாகும்.

இப்போது மே மாதம்.முள்ளிவாய் க்கால் நினைவு வாரம் தமிழர் பிரதேசங்களின் வீதி யோரங்களில் "முள்ளி வாய்க்கால் கஞ்சி" வழங்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

எம் இளம் சந்ததிக்கு அந்த சிரட்டையில் ஊற்றப்பட்ட உப்பின்றிய கஞ்சியைக் குடிக்கக் கொடுப் போம்.பார் இதைத்தான் எம்மினம் தன் உயிரை இழக்கும் தறு வாயிலும் குடித்து மடிந்தது" என எம் இனம் பட்ட பாட்டை எம் பிள்ளைகளுக்குப் புரிய வைப் போம்.

" போர் ஓர் இனத்தின் எச்சங்களையே அழித்தொழித்து விட்ட போதிலும் அந்த இனம் மீண்டு வரும் நம்பிக்கையுடன் பயணிக்க வேண்டும்.

அழிந்த இனமாகிய எம்மிடம் நம்பிக்கை எனும் கை இருக்குமாக இருந்தால் நாம் எழுந்து விடலாம்.

அந்த நம்பிக்கை எனும் வேர் எம் இளம் சந்ததியாகவே இருக்க வேண்டும். அந்த வேரைத் தேடி அழிக்கும் அரக்கனாய் போதை வஸ்தை விதைத்திருக்கும் பேரினவாதத்திற்கு நாம் கொடுக்கும் பதிலடி எது தெரியுமா?

கல்வியில் எம்மை உயர்த்திக் கொள்வதே.

அதற்கு நாம் எம் பண்பாடு கலாசாரங்களை பின்பற்று வதுடன் எம் இனத்தின் எச்சங்களை சிதைக்கும் கொடுரரிடம் அவதானமாயும் விழிப்பாயும் இருக்க வேண்டும்.

உப்பின்றிய முள்ளி வாய்க்கால் கஞ்சியை பருகுவதனூடே எம் இனம் பட்ட இன்னல்களை உணர்ந்து கொள் வோம்.ஓ.. சர்வதேசமே உன் தேவைக்கு கறிவேப்பிலையாய் தமிழினத்தைப் பயன்படுத்தியதற்கு ஒரு நாள் நீ பதில் சொல்லியே ஆக வேண்டும்.

அதுவரை முள்ளி வாய்க்கால்களில் உறங்கும் எம் உறவுகளின் ஆத்மா சாந்தியடையாது.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

அது சரி ஜனாதிபதி ரணிலும் முன்னாள் அமைச்சர் பசிலும் மூடின அறைக்குள் பேச்சு நடத்தியிருக்கினம். நரித்தந்திரங்கள் ஏதும் அரங்கேறப் போகுதோ.

**சாத்திரியார்**-நரித்தந்திரங்கள் எல்லா நேரத்திலும் சரிவராது. காலம் பிழைக்கிற போது நரித்தந்திரம் அவதந்திரமாகப் போகும்.

**கங்காணி**-அதெண்டால் உண்மைதான். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை தோற்கடிப்பதற்காக, ராஜபக்ஷ தரப்பு பல்வேறு வியூகங்களை அமைத்தது.

அதில ஒண்டு தான்; சஜித் ஜனாதிபதியாக வந்தால் நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் வந்து விடுவினம் என்ற பிரசாரம்.

அந்த விசமப்பிரச்சாரம் சிங்கள மக்களின்ர மதியை மயக்கிப் போட, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வெற்றி பெற்று பதவி யேற்றார். ஆனால் அவயள் போட்ட தந்திரம் எப்படிப் புரண்டதெண்டு பார்த்தம் தானே!

ஆகையால தான் சொல்லுறம் எப்பவும் நரித்தந்திரம் வெற்றி தராதெண்டு.

**பண்டிதர்**- அது சரி, எங்கட தமிழ்த்தரப்புக்களை ஜனாதிபதி ரணில் சந்திக்கிறாரல்லோ. அந்தச் சந்திப்பால் ஏதேனும் பலன் கிடைக்குமோ.

**விதானையார்**- அண்டைக்கு நடந்த சந்திப்பைப் பார்த்தம் தானே!

காணிகளை விடுவிக்குமாறு மாவை சேனாதிராஜா ஜனாதிபதி ரணிலிட்ட கேட்ட போது, ஜனாதிபதி ரணில்; உங்கட கட்சிக்குள்ளேயே எவ்வளவு பிரச்சினை இருக்குது.

அதை உங்களால தீர்க்க முடிஞ்சுதோ. அப்ப நான் ஜனாதிபதி எண்ட வகையில எல்லாப்பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்க்க முடியுமோ!



## பேச்சு வார்த்தையின் போது இந்தியப் பிரதிநிதி இருக்க வேணும்

எண்டு ரணில் கேட்டவர்.

**வாத்தியார்**- என்ன சொன்னாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்படி மாவையோடு கதைத்திருக்கக் கூடாது.

கட்சிக்குள்ள பிரச்சினை என்பது வேறு. அப்படியான பிரச்சினை எல்லாக் கட்சிகளுக்குள்ளும் இருக்குது.

ஏன்? ஐக்கிய தேசியக் கட்சியில இருந்து சஜித் விலகி,புதிய கட்சி ஆரம்பித்தார்.

அதை அந்தக் கட்சியின் தலைவர் எண்ட வகையில் ரணில[illegible] தீர்க்க முடிந்ததோ.

ஆகையால உட்கட்சி விவகாரங்களைக் கொண்டு வந்து ஜனாதிபதியின் அதிகாரங்களோட ஒப்பிடக் கூடாது.

இது ஓர் இனத்தின் பிரச்சினை. தமிழ் மக்களின்ர சொந்தக் காணிகளைப் படையினர் கபளீகரம் செய்த பிரச்சினை.

அதனை ஜனாதிபதி உடனடியாகத் தீர்த்து வைக்க வேணும்.

இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் என்னால் தீர்த்து வைக்க ஏலாது எண்டு ரணில் சொல்லுவாராக இருந்தால், அப்ப ஏன் அந்தப் பதவியில இருக்கிறியள் எண்ட கேள்வியைத்தான் மாவையர் கேட்டிருக்க வேணும்.

**மூப்பர்**- அது மட்டுமல்ல வாத்தியார், பொதுவில ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் எங்கட தமிழ் அரசியல் வாதிகள் சந்திக்கின்ற போது எங்கட தமிழ் உறுப்பினர்களோட ஜனாதிபதி அல்லது பிரதமர் கடுப்பாகக் கதைக்கிற [illegible]

இவ்விடயத்தில நாங்கள் கொஞ்சம் விழிப்பாக இருக்க வேணும்.

**சிறாப்பர்**- நாங்கள் ஜனாதிபதியைச் சந்திக்க ஒன்றாகப் போனாலும் எங்களில யாரையேனும் ஜனாதிபதி கடிந்து பேசினால் , அது கண்டு எங்களுக்குள்ள ஒரு சந்தோசம் தானே?

எப்படி வாயைக் கொடுத்து ஜனாதிபதியிட்ட வேண்டிக் கட்டினார் எண்டு வெளியால வந்து கதைத்துச் சிரிக்கலாமல்லோ. உண்மையில எங்கட காணிகளை விடுவிக்க வேணும் எண்டு மாவையர் கேட்க, ஜனாதிபதி ரணில் கடுப்படைந்து கதைத்தபோது, அதற்குத் தமிழ்த் தரப்பினர் மறுத்தான் குடுத்திருக்க வேணும்.

இல்லை எண்டால், பிரச்சினை தீர்க்க முடியாத உங்களோட கதைத்து ஏன் நேரத்தை வீணடிப்பான் எண்டு சொல்லிப் போட்டு பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு அதில இருந்து வெளியேறி இருக்கவேணும்.

இதைவிட்டிட்டு அது மாவையாரைத்தானே கடிஞ்சவர் எண்டு நினைச்சால், அதின்ர பாதிப்பு தமிழ் இனத்திற்கு என்பதைத் தான் நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு சிறாப்பர் கோபத்துடன் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

சிறாப்பரின் கோபத்தில இருக்கக் கூடிய நியாயப்பாட்டை ஆலடியில் இருந்த அனைவரும் புரிந்து கொண்டனர்.

இதன்போது ஆலடியில் நிலவிய அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி**- அது சரி இப்படி ஆடிக்கொருக்கால் ஆவணிக்கொருக்கால் ஜனாதிபதியோட சந்திக்கிறதால எங்கட பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமோ!

**விதானையார்**- இஞ்சே கங்காணியார் எப்பவும் நாங்கள் தனித்துப் பேச்சுவார்த்தைக்குப் போனால் அது எங்களுக்குத் தான் தோல்வி. என்னைப் பொறுத்தவரையில, ஜனாதிபதிக்கும் தமிழ் அரசியல் தரப்புக்கும் இடையில பேச்சு நடக்கிறதாக இருந்ததால்,அதில் ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி கட்டாயம் பிரசன்னமாகி இருக்க வேணும். அதிலும் அந்த வெளிநாட்டுப் பிரதிநிதி இந்தியாவைச்சேர்ந்தவராக இருந்தால் மிகவும் நல்லது.

இவ்வாறு விதானையார் கூற, ஆலடியில் இருந்த அனைவரும் விதானையார் கூறிய வெளிநாட்டுப் பிரதிநிதியின் பிரசன்னம் என்ற கருத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதுடன் அப்படியான ஒரு நிலைப்பாட்டை எங்கட தமிழ் அரசியல் தரப்புகள் எடுக்க வேணும் என்று வாத்தியார் வழிமொழிய, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்க் கட்சிகள்- ஜனாதிபதி பெறுமதியற்ற பேச்சு வார்த்தைகள் காலத்தைக் கடத்தி சர்வதேசத்திடம் காசு வாங்கவா?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஈழத்தமிழர் மீது இந்தியாவுக்கு கரிசனையற்றுப் போனது ஏன் வியாசரே?**

இந்திய பிரதமர் ராஜிவ்காந்தியின் கொலையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்பிருப்பதாக இந்தியா ஆணித்தரமாக நம்பியது.

அதன் வெளிப்பாடே ஈழத்தமிழினத்தின் மீதான இந்தியாவின் வெறுப்புக்கான காரணமும்.

என்ன செய்வது காலம் யாரைத்தான் விட்டு வைத்தது. காந்தியைச் சுட்ட கோட்சேக்கு மன்னிப்பு வழங்கிய காந்தி தேசம் தமிழினத்தை வஞ்சித்துவிட்டதே என்ற மனக்குமுறல் தமிழ் மக்களை இன்று வரை வாட்டிக் கொண்டே இருக்கிறது.

**ரம்மியா — மந்துவில்**

**அறிவை மனிதன் எந்த இடத்தில் பயன்படுத்துவது சிறந்தது வியாசரே?**

ஆத்திரம் கண்ணை மறைத்திடும் போது அறிவுக்கு வேலை கொடு என்றார் கண்ணதாசன்.

அறிவென்பது மனிதன் தன்னைக் கட்டுப்படுத்தக்கூடிய கருவியாகப் பாவிக்க வேண்டும்.

தற்போதைய விஞ்ஞான வளர்ச்சியை அறிவு என்று கூறினாலும் அந்த அறிவு ஆக்கத்தையும் அழிவையும் தரவல்லது.

மனிதனை அறிவு கட்டுப்படுத்தக் கூடியதாய் இருந்தால் அதற்கு மதிப்புண்டு. இல்லையேல் அது அழிவையே தரும்.

**திகான் — வடமராட்சி**

**உணவகங்களில் பிழிந்த தேங்காய்ப் பூ சம்பலுடன் இடியப்பம் சாப்பிட்ட அனுபவம் உண்டா வியாசரே?**

உணவு என்பது மனிதனுக்கு மிக முக்கியமானது. அந்த உணவு விடயத்தில் உணவகங்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

உண்ணும் உணவில் கலப்படம் சேர்ப்பவர்கள் உண்மையில் மனிதனே இல்லை என்பது தான் பொருள்.

பழுதடைந்த உணவுகளை மனிதர்களுக்கு வழங்கினால் இறைவன் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்.

அண்மையில் ஒரு உணவகத்துக்குப் போயிருந்தேன். ஆனால் கடை உரிமையாளருக்கு வீட்டில் இருந்து உணவு வந்து உண்டுகொண்டிருந்தார். உற்றுப்பார்த்தேன். அவர் உண்ணுவது தோசை.

ஏன் அவர் கடையில் இருக்கும் தோசையை உண்ணவில்லை என்ற கேள்வி என்னில் எழுந்தது. உடனேயே கைகளைக் கழுவிவிட்டு வெளியே வந்துவிட்டேன்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தேவகி — கிளிநொச்சி**

**முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்தீர்களா?**

நாம் அனைத்தையும் மறந்து, கடந்துபோன இனமாக மாறியிருப்பது தான் வேதனை.

2009 ஆம் ஆண்டு இந்தக் காலம் தமிழினம் கொத்துக்கொத்தாய் அழிக்கப்பட்ட காலம்.

உண்ண உணவின்றி, உடுக்க உடை இன்றி, உறங்க வீடின்றி, குடிக்க மருந்தின்றி குண்டடிபட்டு துடித்து இறந்துபோன எம் தமிழ் உறவுகளை நாம் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் அவர்கள் பருகிய கஞ்சியை நாமும் பருகி எம் இனத்தின் வடுக்களை உணர்ந்து கொள்ள முற்படுவோம்.

**சுதன் — குப்பிழான்**

**தமிழ்க் கட்சிகள்- ஜனாதிபதி பெறுமதியற்ற பேச்சு வார்த்தைகள் காலத்தைக் கடத்தி சர்வதேசத்திடம் காசு வாங்கவா?**

காலம் கடத்தல் என்பது காலம் காலமாக நடந்துகொண்டிருக்கும் காய் நகர்த்தல்.

அதை இலங்கை ஆட்சியாளர்கள் மிக நுட்பமாக செயற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த சாதாரண அரசியல் நுட்பத்தைக்கூட புரிந்துகொள்ள இயலாத தமிழ் தலைவர்கள் இவர்களை நம்புகிறார்கள் எனின் எதைச் செய்து விட முடியும்.

தேர்தல் வந்தால் வேட்டும், தேர்தல் முடிந்தவுடன் கூட்டும் என்ற எழுதப்படாத செயற்றிட்டத்தில் மாட்டியிருக்கிறார்கள் என்பது மட்டும் புரிகிறது.



உணவகங்களில் பிழிந்த தேங்காய்ப் பூ சம்பலுடன் இடியப்பம் சாப்பிட்ட அனுபவம் உண்டா வியாசரே?

**ஜெகமோகன் — கொக்குவில்**

**ராஜபக்ஷக்கள் எழுகை பெறுவார்கள் என்கிறார்களே நடக்குமா?**

வன்னிப் பெரும் நிலப்பரப்பில் மூச்சை இழந்த அத்தனை உயிர்களின் இறுதி நிமிடமும் எப்படி இருந்திருக்கும் தெரியுமா?

கடவுளே! நான் யாருக்கு என்ன பாவம் செய்தேன்? யாருக்கும் துரோகம் இழைக்காத எனக்கு ஏன் இப்படியொரு கொடும் சோதனை? இதற்கு நீதி இல்லையா? இந்தக் கேள்விகளுக்கான பதிலை கடவுள் நிச்சயம் தீர்த்து வைப்பார், வைக்கிறார், வைக்கப்போகிறார்.

தொடக்கம் ஒன்று உண்டெனில் முடிவு நிச்சயம் அல்லவா? முடிவை எட்டிவிட்டோம் போல தெரிகிறது. கொஞ்சம் பொறுமையாய் இருப்போம்.

**விஜயரட்னம் — யாழ்ப்பாணம்**

**தமிழினத்துக்கு 13 ஐ கொடுக்காமை இந்தியாவிற்கு படுதோல்வியா வியாசரே?**

நிச்சயமாக படுதோல்வி தான். இந்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்த இந்தியா எவ்வளவோ முயற்சித்தது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் அதற்கு அடிபணியவில்லை.

தெற்காசியாவின் வல்லரசு என்ற அந்தஸ்தில் இருக்கும் இந்தியாவால் இலங்கை ஆட்சியாளர்களை அதட்ட முடியவில்லையே.

எல்லாம் சீனாவின் செல்வாக்குத்தான் காரணம் என்பதும் இந்தியாவுக்குத் தெரியும்.

**சங்கரசிவன் — வதிரி**

**தமிழ் தலைவர்களின் ஒற்றுமை ஹர்த்தாலுக்கு மட்டும்தானா? கடைசி வரை நீடிக்குமா?**

ஒரு காலும் கடைசி வரை நீடிக்காது. எம் அரசியல்வாதிகளுக்கு சுயநல அரசியல் மாத்திரம் தான் தெரியும். ஆதலால் அவர்களுக்கு; தமக்குத் தமக்கு என்று சுளகாய் படக்கு படக்கு என்பதுதான் தெரியும்.

இவர்களுக்கு தமிழ் மக்கள் மீது அக்கறை உண்டு, அன்பு உண்டு என நீங்கள் நினைத்தால் உங்களைப்போல முட்டாள்கள் வேறு யாருமாக இருக்க முடியாது.

அவ்வாறு இருக்குமாக இருந்தால் வருடத்துக்கு ஒரு புது வாகனம் வாங்க மாட்டார்கள். மாட மாளிகை கட்டி அதில் சொகுசு வாழ்க்கை வாழ மாட்டார்கள்.

சுயநலமற்ற அரசியல் தலைவர்களை தமிழ் மண் இழந்து பல தசாப்தங்கள் ஆகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : துலாபாரம்
பாடியவர் : T.M.S, P.சுசீலா
இசை : தேவராஜன்
இயற்றியவர்: கவியரசர்



பூஞ்சிட்டு கன்னங்கள் பொன்மணி தீபத்தில்
பால் பொங்கல் பொங்குது பன்னீரிலே
பொங்கல் பிறந்தாலும் தீபம் எரிந்தாலும்
ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே
இந்த ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே

பூஞ்சிட்டு கன்னங்கள் பொன்மணி தீபத்தில்
பால் பொங்கல் பொங்குது பன்னீரிலே
பொங்கல் பிறந்தாலும் தீபம் எரிந்தாலும்
ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே
இந்த ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே

செல்வர்கள் இல்லத்தில் சீராட்டும் பிள்ளைக்கு
பொன்வண்ண கிண்ணத்தில் பால் கஞ்சி
செல்வர்கள் இல்லத்தில் சீராட்டும் பிள்ளைக்கு
பொன்வண்ண கிண்ணத்தில் பால் கஞ்சி
கண்ணீர் உப்பிட்டு காவேரி நீரிட்டு
கலயங்கள் ஆடுது சோறின்றி
இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி

கண்ணுறங்கு கண்ணுறங்கு
பொன்னுலகம் கண்ணில் காணும் வரை
கண்ணுறங்கு கண்ணுறங்கு

பூஞ்சிட்டு கன்னங்கள் பொன்மணி தீபத்தில்
பால் பொங்கல் பொங்குது பன்னீரிலே
பொங்கல் பிறந்தாலும் தீபம் எரிந்தாலும்
ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே
இந்த ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே

மாணிக்க தேர் போல மயிட்டு பொட்டிட்டு
மகராஜன் செல்வங்கள் விளையாடும்
மாணிக்க தேர் போல மயிட்டு பொட்டிட்டு
மகராஜன் செல்வங்கள் விளையாடும்
கண்ணாடி வளையலும் காகித பூக்களும்
கண்ணே உன்மேனியில் நிழலாடும்
இல்லாத உள்ளங்கள் உறவாகும்
கண்ணுறங்கு கண்ணுறங்கு
பொன்னுலகம் கண்ணில் காணும் வரை
கண்ணுறங்கு கண்ணுறங்கு

பூஞ்சிட்டு கன்னங்கள் பொன்மணி தீபத்தில்
பால் பொங்கல் பொங்குது பன்னீரிலே
பொங்கல் பிறந்தாலும் தீபம் எரிந்தாலும்
ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே
இந்த ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே

# அன்போ ...அன்பே...

**‘சுயநலமில்லாமல் நிபந்தனையற்ற அன்பைத் தரும் செல்லப்பிராணிகள் மனபாரத்தை இறக்கி மகிழ்ச்சியையும் தருகின்றன’ என்பது வளர்ப்பவர்கள் கூற்று. அவ்வாறு விநோதமான பிராணிகளை உயிருக்கு உயிராக வளர்க்கும் பிரபலங்களை இங்கே பார்க்கலாம்...**

### ஜஸ்டின் பீபர்



உலக அளவிலான பாப் இசை ரசிகர்களின் பீவரை ஏற்றியவர். உறவினர் ஒருவரிடமிருந்து பிறந்தநாள் பரிசாகக் கிடைத்த கபுச்சின் குரங்கைச் செல்லப் பிராணியாக வளர்த்துவந்தார். ஒருமுறை ஜேர்மனிக்குச் சென்றபோது அவருடன் அந்தக் குரங்கும் பயணித்தது. அங்குதான் சிக்கலும் வந்தது. ஜேர்மனியில் அழிந்துவரும் விலங்காக இருக்கிற இந்தக் குரங்கினம் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. அதனுடன் பீபருக்கு 8,000 டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

### லியோனார்டோ டிகாப்ரியோ



தனது 15வது வயதிலிருந்து தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து ஹாலிவுட் இண்டஸ்ட்ரிக்குள் வந்து ஆஸ்கார் வரை வெற்றி நடை போட்டவர். டைட்டானிக்கில் மூழ்கி ரசிகர்களின் அன்பில் முத்தெடுத்த இவர், 200 பவுண்டு எடையுள்ள ஆபிரிக்க ஆமை ஒன்றை வளர்த்துவருகிறார். கிட்டத் தட்ட 100 ஆண்டுகள் வரை வாழும் இந்த ஆமையை ஒரு கண்காட்சியிலிருந்து வாங்கியிருக்கிறார்.

### அர்னால்டு ஸ்வாஸ்னேக்கர்



“டெர்மினேட்டர்”ஹீரோ. அதிரடியான இந்த ஆக்‌ஷன் நாயகனுக்கு செல்லப் பிராணிகள்மீது முரட்டுத்தனமான பாசமுண்டு. 75 வயதான இவரது வீட்டில் ஒரு கழுதை, ஒரு சின்னக் குதிரை, ஒரு நாய் எனப் பல பிராணிகள் வளர்கின்றன. அவற்றுடன் புதிதாக Schnelly எனப் பெயரிடப்பட்ட பன்றிக்குட்டி ஒன்றும் புதிதாக இணைந்துள்ளது. Schnelly என்றால் ஜேர்மன் மொழியில் ‘விரைவான’ என்று அர்த்தமாம்!

### கிறிஸ்டன் ஸ்டீவர்ட்



குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமான இவரிடம் நான்கு ஓநாய்-நாய் கலப்பின விலங்குகள் செல்லப்பிராணிகளாக உள்ளன. கலிபோர்னியாவில் உள்ள தன் தாயின் வீட்டில் வைத்துப் பராமரித்தபோது, ‘காட்டு விலங்குகளை இவ்வாறு வளர்க்கக் கூடாது’ என்று அண்டை வீட்டுக்காரர் சண்டை போட்டதால் சிக்கலை எதிர்கொண்டார். பிறகு உரிமம் பெற்று, இயற்கைச் சூழலில் வாழும் வகையில் பல ஏக்கர் நிலத்தில் வைத்துக் கொஞ்சி மகிழ்கிறார்.

### நிக்கோலஸ் கேஜ்

90ஸ் கிட்ஸ்களின் மறக்க முடியாத ஹீரோவுக்கு ஊர்வனவற்றின் மீது தாறுமாறான பற்றுண்டு. அரிதான விலங்குகள் பலவற்றை இவர் நண்பர்களாக வைத்திருந்தார். அவற்றுள் இரண்டு அல்பினோ கிங் கோப்ராக்கள், ஒரு ஆக்டோபஸ், ஹார்வி என்ற இரண்டு தலைப் பாம்பு, ஐந்து அடி நீளமுள்ள ஆசியப் பல்லி, ஏராளமான ஆமைகள், மீன்கள் எனப் பட்டியல் நீள்கிறது. வீட்டில் கையாள முடியாத அளவுக்கு பிராணிகள் சேர்ந்ததால், இப்போது உயிரியல் பூங்காவில் வைத்துப் பாதுகாக்கிறாராம்.

### பாரிஸ் ஹில்டன்



இந்த ‘சர்ச்சை’ நாயகி, மழைக்காட்டில் வாழும் பாலூட்டி விலங்கான கின்காஜூவைச் செல்லப் பிராணியாக வளர்த்துவருகிறார். அதற்கு ஒருமுறை ரேபிஸ் நோய் வர, இவருக்கும் பரவும் ஆபத்து இருப்பதாகச் சொல்லி கால்நடை மருத்துவர்கள் கருணைக் கொலை செய்யச் சொன்ன போது மறுத்துவிட்டார். மாறாக, தடுப்பூசிகள் போட்டு மிகவும் கவனமாகப் பராமரித்துக் காப்பாற்றிவிட்டார். அதற்கடுத்து தனது வீட்டுக்கு இன்னொரு கின்காஜூவையும் வரவழைத்துக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத அரசியலில் உருவெடுக்கும் சிலை அரசியலை கைவிடுங்கள்

ஒரு பெரும்பான்மை கொண்ட அரசானது ஒரே நாடு, ஒரே இனம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே மதம், ஒரே கடவுள் என எல்லாவற்றையும் அங்கு வாழும் சிறுபான்மையினருக்கு எதிராக ஒருமைப்படுத்த முயல்வது ஒருபோதும் ஒற்றுமைக்கு வழி வகுக்காது.

எந்த தேசத்தில் சமநோக்கோடு கூடிய சிறுபான்மையினருக்கான ஜனநாயகம் நிரந்தரமாக மறுக்கப்படுகின்றதோ அங்கு அமைதி சீர்குலைந்து மக்களுக்கான ஜனநாயகம் பெரும் தோல்வியை சந்திக்கின்றது என்பதே கடந்த கால உலக வரலாறாகும்.

ஒரு தேசத்துக்குள் ஒரு இன அடிப்படையிலான முரண்பாட்டையோ அல்லது ஒரு மொழி அடிப்படையிலான முரண்பாட்டையோ ஓரளவு சுமுகமாக தீர்த்து வைக்க முடியும். ஆனால் மத அடிப்படையில் உருவாகும் முரண்பாடுகளை இந்த உலகில் தீர்த்து வைப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல அது மிகவும் கடினமானது.

தேசங்களுக்கு இடையிலான, இனங்களுக்கு இடையிலான, மொழிகளுக்கு இடையிலான படையெடுப்புக்களையும் குண்டு வெடிப்புக்களையும் விட, மதங்களுக்கு இடையிலான படையெடுப்புக்களும் குண்டு வெடிப்புகளையுமே இந்த உலகம் அதிகம் பார்த்திருக்கின்றது.

உலக மதங்கள் ஒருபோதும் ஜனநாயக மக்களுக்கு சோறு போடாது என்பதே உலகம் கற்றுத் தந்த பட்டறிவாகும். அது தனி மனித ஒழுக்க விதிகளை எப்படி கடைப்பிடிப்பது என்பதையும் தான் பின்பற்றும் மதத்தை எப்படி கடப்பது என்பதையும் கற்றுத் தருவதுதான் அதன் பரிபூரண கடமையாகும்.

தன்னுடைய மதத்தையும் அதனுடன் இணைந்த அடையாளங்களையும் மனித மனம்ானது மண்ணில் பிற மதங்களுக்கு எதிராக தூக்கி நிறுத்துவது அவரவர் மதங்கள் கற்றுத் தரும் ஒழுக்க விதிகளுக்கு எப்போதும் முரணானது என்பதை எல்லா மத நூல்களும் தெட்டத் தெளிவாக சுட்டி காட்டுகின்றது.

ஒரு மதம் என்பது ஒரு மனிதனின் தனிப்பட்ட பிறப்புரிமை .அந்த மதமானது அவன் மனதில் மட்டுமே நிலைத்திருக்க வேண்டும். அது பிற மதத்தவரின் மன எல்லைகளையும் அவர்களின் மத கலாசாரங்களுக்குரிய புனித பூமியையும் களங்கப்படுத்துவதாக ஒருபோதும் இருக்கக் கூடாது.

ஒரு தேசத்தில் வாழும் பெரும்பான்மையினருடைய மத அரசியலில் இருந்துதான் சிலை அரசியல் உருவெடுக்கின்றது. அந்த சிலை அரசியலை தக்க வைப்பதற்கு சிறுபான்மையினருடைய மண் உரிமை மறுக்கப்படுகின்றது அல்லது அத்துமீறி அபகரிக்கப்படுகின்றது என்பதே பெரும் உண்மையாகும்.

இது தங்கள் மதத்தைக் முன் நிறுத்தி சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை பறிக்க பெரும்பான்மை கொண்ட எதிரிகள் கையாளும் ஒரு தந்திரம் மிக்க செயலாகும்.

தன் மதத்தை கொண்டு இன்னுமொரு மதத்தை ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது. தன் கடவுள் சிலையைக் கொண்டு பிற மதத்தவரின் கடவுள் சிலைகளின் சிரசைக் கொய்து விட முடியாது. மண்ணை தர்மத்தின் மகிமையால்தான் ஆள வேண்டுமே தவிர மதத்தால் அல்ல என்பதை சிறுபான்மையினருக்கு எதிராக கொதித்தெழும் கடும் மதவாத போக்குடைய பெரும்பான்மை அரசுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

மத அரசியலாலும் சிலை அரசியலாலும் ஒரு தேசத்தில் சிறுபான்மை யினருடைய உரிமைகளையும் அதோடு இணைந்த சுதந்திரத்தையும் முற்று முழுதாக எவராலும் பறித்து விட இயலாது.

சிறுபான்மை மக்களினுடைய இதய மொழிகளையும் அவர்களின் உள்ளார்ந்த உணர்ச்சிகளினுடைய போக்கையும் புரிந்து கொண்டு செயலாற்றாத பெரும்பான்மை கொண்ட அரசுகள் தங்கள் மதத்தையும் அதன் சிலைகளையும் தற்காலிகமாகவேனும் நம்பித்தான் சர்வதேசத்தின் முன்னிலையில் அரசியல் செய்ய வேண்டி ஏற்படும்.

**சாம் - ரமேஸ்குமார்.**






அழகிய அந்த நதிக்கரையில் உட்கார்ந்திருந்தான் ஓர் இளைஞன். அவன் முகத்தில் சோகம். சமீபகாலமாக அவன் மேற்கொண்டிருந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்திருந்தன. அதனால் எழுந்த துக்கம் மனதைப் பாரமாக்க, அமைதியைத் தேடி நதிக்கரைக்கு வந்திருந்தான்.

பேசாமல் உயிரை மாய்த்துக்கொள்ளலாமா?' எனும் அளவுக்கு அவனுள் சிந்தனைகள் எழுந்தன.

சட்டென்று ஒரு சலனம். துறவி ஒருவர் ஆற்றில் நீர் பருகிவிட்டுக் கரையேறிக்கொண்டிருந்தார். அருகிலுள்ள ஊருக்கு வழி கேட்கும் பொருட்டு இவனிடம் வந்தார். இவன் முகத்தைப் பார்த்ததுமே ஏதோ துயரத்தில் இருக்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டார்.

இவனிடம் பேச முற்பட்டார். ஆனால், இளைஞனோ முகத்தைத் திருப்பிக்கொண்டான். அருகில் வந்து அவன் தலைமுடியைக் கோதினார். அதேநேரம் காற்றும் வீசியது. காற்றின் குளிர்ச்சியும் துறவியின் பரிவும் மனத்தின் பாரத்தைக் குறைத்தன. மெள்ள நிமிர்ந்தான்.

துறவி அருகில் அமர்ந்தார். இளைஞனிடம் அவன் துக்கத்துக்கான காரணத்தைப் பற்றி விசாரிக்க முற்படவில்லை. கரையில் இருந்த மரத்தைச் சுட்டிக்காட்டினார். காற்றின் விசையால் கிளைகள் அசைந்தாட, அவற்றிலிருந்து உதிர்ந்த இலைகள் நீர்ப் பரப்பில் விழுந்து, அதன் பிரவாகத்தில் ஆனந்தமாய்த் தவழ்ந்துசெல்வதைக் கண்டான்.

இப்போது துறவி சொன்னார். இளைஞனே, இதுவரையிலும் சிறு சிறு கற்களை நதியில் போட்டுக்கொண்டிருந்தாய் அல்லவா? அவை என்ன வாயிற்று என்று பார்த்தாயா?"

உடனே இளைஞன் நதிக்குள் பார்த்தான். அது ஆழம் குறைவான பகுதி. நீரும் தெளிவாக இருந்தது. இவன் வீசியெறிந்த கற்கள், நதியின் அடிப்பரப்பில் தேங்கிக்கிடந்தன. துறவி எதற்காகக் கற்களைப் பற்றிக் கேட்கிறார் என்பது இளைஞனுக்குப் புரியவில்லை.

# வெற்றிக்கதவை எளிதில் திறக்கலாம்

இளைஞனே, நதியில் வீசியெறியப்பட்ட கல், தரையில் தங்கிவிடுகிறது. கரையோர மரத்திலிருந்து காற்றில் உதிர்ந்த இலைகள், நதியின் பிரவாகத்தில் ஆனந்தமாகத் தவழ்ந்து செல்கின்றன. அநேக விஷயங்களை உள்ளுக்குள் தேக்கி, அதனால் கல்லைப் போன்று கனம் கொள்ளும் மனிதனும், வாழ்க்கைப் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர முடியாமல், ஓரிடத்திலயே விழுந்து கிடக்கிறான். இலையைப் போல் லேசாக இருப்பவன், இறுதிவரை இன்பமாக நடக்கிறான் என்றார்.

அந்தப் புத்திசாலி இளைஞன், அவர் கூறியதன் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொண்டான். ஒரு துள்ளலுடன் எழுந்து அவரை வணங்கியவன், உற்சாகத்துடன் புறப்பட்டான்!

மேற்சொன்ன கதையில் துறவி குறிப்பிட்ட நம் மனத்தைக் கனமாக்கும் அநேக விஷயங்களில் அளவில்லா ஆசை, அதீத அகங்காரம், பொறாமை, தேவையில்லாத பற்றுதல், வீண் கவலைகள் ஆகியவையும் உண்டு. அவற்றை விட்டுவிடுவது அவசியம்.

மீனவர்கள் சிலர் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தரையில் போட்டிருந்த ஒரு பெரிய மீனை எடுத்துக்கொண்டு பறந்தது ஒரு பருந்து. அங்கிருந்த காக்கைகள், தரையில் கிடக்கும் மீன்களை எடுப்பதை விட்டுவிட்டு பருந்தைத் துரத்தத் தொடங்கின.

நூற்றுக்கணக்கான காக்கைகள், பருந்து போகும் இடமெல்லாம் போய் அமளி செய்தன. பருந்து எந்தத் திசையில் பறந்தாலும் விடவில்லை. பறந்து பறந்து சோர்ந்துபோனது பருந்து.

ஒரு நிலையில், சோர்வு காரணமாக பருந்து தன் அலகைத் திறக்க, அதன் வாயில் பிடிபட்டிருந்த மீன் கீழே விழுந்தது. துரத்திய காக்கைகள் பருந்தை விட்டுவிட்டு மீனைப் பிடிக்கக் கீழே பாய்ந்தன. பருந்து களைத்துப்போய் ஒரு மரக் கிளையில் உட்கார்ந்தது. அப்போதுதான் அதன் கவலை தீர்ந்தது. மெள்ள மெள்ள அதற்குப் புரியத் தொடங்கியது: 'காக்கைகள் துரத்தக் காரணம், தன் வாயிலிருந்த மீன்தான். மீனை விட்டுவிட்டால் காக்கைகள் துரத்தாது, நிம்மதியாக இருக்கலாம்.'

ஒருவகையில் நாமும் பருந்துதான். நம்முடைய ஆசைகள், வீண் கவலைகள் முதலான மீன்களைப் பற்றிகொண்டிருக்கிறோம். அவற்றை விட்டுவிட்டால், வாழ்க்கை எனும் வானில் இலக்கை நோக்கி மிக எளிதாக சந்தோஷமாகச் சிறகடித்துப் பறக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்விழந்த தேசத்தில்



வாலிபத் தியாகங்களால்
வலிமை கண்ட தேசத்தில்
போலிகள் தலைமையேற்க
வேலிகள் தகர்ந்து போகும்!

பச்சை மயமாகிப்
பாதீனியப் படைகள்
கச்சையுடன் சென்றவரை
கம்பீரமாய் நிறுத்தும்!

கட்சிசார் பட்சி சில
கத்திக் கரைந்து போகும்!
ஊடக ஊது குழல்
ஊதிப் பெருப்பிக்கும்!

வரிந்து கட்டியே
பிரிந்து நிற்கின்ற
தரித்திர அரசியலால்
விரித்த வலை வீழும்!

இரா.ஜெயக்குமார்.

# மார்க்கம் இல்லையா?

சிலைகள் வைத்து
சீரழிந்து போன போக்கிலே
மனித வாழ்வு மகத்துவத்தை
இழந்து போவதா?

அரசமரங்கள் தம்மை நாட்டி
அரசு செய்வதே ஆட்சி
அரசில் இருக்கும் அமைச்சுகட்கு
அறனை பெயர்ந்ததா?

மனித வாழ்வு தன்னை நாட்ட
மார்க்கம் சொன்னவன் புத்தன்
அகிம்சை அன்பு இன்பமென்று
வாழ்ந்து சென்றவன்.

சிலைகள் சிதைந்து சீரழிவை
கண்ட நிலைவிட்டு இப்போ
அரச மரங்கள் நாட்டி நாட்டில்
ஆட்சி செய்வதா?

மனித வாழ்வின் மகத்துவங்கள்
இனிமை கொண்டதே என்று
எண்ணித் துறவு கொண்ட புத்தன்
மண்ணில் இல்லையே! நமக்கு

ஏக்கம் ஒன்றை அன்றி வேறு
ஏதுமில்லையே; மனிதம் வாழ்வதற்கு
மார்க்கம்,என்ற ஒன்று இன்றி வேறு
மார்க்கம் இல்லையா?



வளவை வளவன்.

# அழிவை நோக்கி ஈழம்

உதிர்ந்திடும் மலராய் ஒளிர்ந்திடும் ஈழம்
மறைந்திடும் நாட்கள் அண்மையில் கண்டிட

உரிமை வேண்டி உயிர்களை விதைத்து
கனவுகள் தொலைத்தோம் காரிருள் நாட்டில்

சுயநலம் கொண்டிடும் அரசியல் நரிகளின்
கால்களில் ஈழம் புழுவாய் நசிந்திட

வேடிக்கை பார்க்கும் வெள்ளை வேட்டிகள்
எதிரியின் காலை அமுதாய் நினைக்கிறது

தமிழரை அழிக்கும் பேதையர் சட்டங்கள்
மணவாய் சட்ட மேடையில் தொங்கிட

தாய்நிலம் பறிக்கும் நாக்குடன் இன்றும்
முளைக்குது மகானின் சிலைகள்

உலகினை உலுக்கிய ஈழம் இன்று
போதையில் உறங்குது பேதையர் சதியால்

என் உயிர் ஈழம் அழிவதை எண்ணி
அனலாய் எரியுது ஈழக் காதலன் நெஞ்சம்



ந. விதுஷன், யா/ஹாட்லிக் கல்லூரி.

## மௌனத்தின் தேடல்- 668



# தங்கச்சுமை

இடர் பல கண்ட எங்களின்
இன்பத் திருநாட்டில் - சிறுவருக்காய்
இயற்றிய சட்டங்கள் ஏராளம்-இன்னும்
இளையோர் பெருஞ்சுமையோ தாராளம்
வண்டியிழுத்து வாழ்வதே எங்களின் விதியாச்சு
வந்த சுமை மாறாத மாபெரும் வலியாச்சு - ஆயினும்
அண்ணனவன் துணையிருக்கும் நாள் வரைக்கும்
அன்புத் தங்கை சுமப்பதெல்லாம் தங்கமாகும்.

சாந்தையூர் வினீ,
பண்டத்தரிப்பு.

# ஓயாத கரங்கள்

ப்ஞ்சம் வந்து வறுமையாக்க பசியாய் வாடி
பாலகர்கள் பாதைகள் தோறும் வீதித் தொழிலாளர்களாய்
மாடு வண்டி இழுப்பது போல் தனையன் சுமைதனை இழுக்கிறான்
பள்ளி செல்லவில்லை பாடம் கற்கவில்லை
பாசம் கொள்ள உறவுகள் இல்லை
நேசம் கொள்ள நண்பர்கள் இல்லை
அன்பு காட்ட அன்னை இல்லை தந்தை இல்லை
வேதனைகள் சோதனைகள் மனித வாழ்வாய்
உழைத்து களைத்த ஓயாத கரங்கள்.

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

# பசி தீர வழியென்ன?

சிறுவர் தொழிலாளர்
தடைச்சட்டம் எதற்கு?
சம்பாதித்து சாப்பாடு தர
ஆளில்லாத எமக்கு நாம்
உழைக்கவில்லையானால்
, உணவிடுவது யார்?
நாம் மட்டுமல்ல சிறந்த தொழில்
செய்யாவிட்டால் குடும்பங்கள்
பலவற்றில் பட்டினிச் சாவுகள்
நிறைந்திருக்கும்

சி.இ. அன்புதுரை,
சம்மட்டியோலை,மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 669



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# கொத்தடிமைக் குழந்தைகள்

மண் சுமப்போம்
சுண்டல் விற்போம்
கைவண்டி இழுப்போம்
எம் குடும்பத்துக்கு அல்ல
எம்மைச் சுரண்டி வாழும்
எஜமானுக்காக நாங்கள்
கடத்தப்பட்ட விற்கப்பட்ட
கொத்தடிமைக் குழந்தைகள்

பிரமன், கொக்குவில்.

# சுமைதாங்கி

சுமைதாங்க வந்தவன் - வேறு
சுகம் தேடிப் போய்விட்டானோ
அல்லது
தொலைந்தவர் பட்டியலில்
சேர்த்து விட்டானோ
பரிதாபம்
துள்ளித் திரியும் வயதில் - இவர்கள்
துன்பப்பட நேர்ந்தது.

ஜெ.விஜயநிர்மலா,
சங்கத்தானை.

# கடும் உழைப்பே வாழ்வை வளமாக்கிடும்

சுமைவண்டி இழுத்தேனும்
வறுமையை வதைத்திடுவோமென
வளரும் இளைஞர் குழாமுடன்
சுமைகள் பல சுமந்தேனும்
[illegible]
நாளைய தந்தையர் யுகமுமே.

தங்கத்தமிழன், காரைநகர்.

# தன்நம்பிக்கை

பெற்றோரை இழந்து விட்ட எம்மைப்
பேணி வளர்க்க யாருமில்லை
உற்றார் உறவினர் இருந்தும் கூட
உதவிக்கரம் நீட்ட எவருமில்லை
பட்டினியில் இருந்து எமைப் பாதுகாக்க
பள்ளி செல்லும் பருவத்தில்
பாரச் சுமை தூக்கி
தன்னம்பிக்கையோடு நாம்
உழைத்துச் சாப்பிட முன்வந்து விட்டோம்.

ஆ.செல்வி, திருநாவலூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 61

# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்

இத்தகைய மாற்றத்துக்கு காரணம் புரியாததால் அவள் சற்றே தலைகுனிந்து கொண்டு சில விநாடிகள் ஏதோ யோசித்தாள். பிறகு தலை குனிந்த வண்ணமே பேசவும் முற்பட்டு, "தந்தையே!" என்று அழைக்கவும் செய்தாள்.

"ஏன் மகளே?" என்று அனபுடன் வின வினான் பலவர்மன். "இன்று உங்கள் போக்கு புதுவிதமா யிருக்கிறது."

"ஆம்" "ஏதேதோ பேசுகிறீர்கள்."

"ஆம்." "ஒரு தந்தை மகளிடம் பேசக்கூடாத விஷயங்களைப் பேசுகிறீர்கள்." "உண மைதான்."

"ஏன் பேசுகிறீர்கள் அப்படி?"

சீற்றமெல்லாம் குரலிலிருந்து பறக்க, வருத்தமும் வெட்கமும் குரலில் தோய்ந்து நிற்கக் கேட்டாள் மஞ்சளழகி. பலவாமனி டமிருந்து உடனே பதில் வர வில்லை. "இதோ பார் மஞ்சளழகி?" என்று சில விநாடிகள் கழித்து வந்த பதிலில் அதுவரை கேட்காத புதுத் தொனி இருந்தது. மஞ்சளழகி தன் அழகிய விழிகளை ஏறெடுத்துப் பலவாமனை நோக்கினாள்.அவன் கண்களில் ஏதோ புத்தொளி யொன்று படர்ந்து நின்றது.முகம் விபரிக்க இயலாத உறுதியை பூண்டிருந்தது.

அவன் அடுத்துச் சொன்ன வார்த்தைகளும் உறுதியுடனும் திடத்துடனும் வெளி வந்தன. அவன் உதிர்த்த சொற்கள் ஒவ்வொன்றும் அவள் இதயத்தில் பெரும் இடிகளாகத் திடீர் திடீரென விழுந்தன. அதுவரை அறியாத பெரும் ரகசியமொன்றை அன்று அவள் அறிந்து கொண்டாள்.அந்த அறிவு பெற்றதால் அவள் தலை சுழன்றது. ஆசனத்தைப் பிடித்திருந்த கைகள் செயலற்றுப் போயின. உடலும் துவண்டது. மயக்கமுற்று விழும் நிலைக்கு அவள் வந்துவிட்டாள்.

### நான்யார்?

அன்றுவரை தான் என்றுமே கேட்டிராத புதுத்தொனி கண்டத்திலிருந்து ஒலிக்கவும், அந்த விநாடிவரை தான் ஆயுளில் பார்க்காத புத்தொளி முகத்தில் படர்ந்து நிற்கவும், "இதோ என்னைப் பார் மஞ்சளழகி" என்று தன்னை அழைத்த தந்தை முகத்தை ஏறெடுத்து நோக்கிய அக்ஷயமுனைப் பாவை, தந்தை குரலிலும் முகபாவத்திலும் ஏற்பட்ட அந்தப் புது மாற்றத்தைக் கண்டதும் குழம்பினாள்.

எந்தச் சமயத்திலும் வஞ்சகமும் குரூரமும் நிரம்பும் பார்வையை உடையவரும், அந்தக் குரூரத்திலும் வஞ்சகத்திலுங்கூட இனியதொரு தோற்றத்தையும் நிதானத்தையும் முகத்தில் படரவிட்டுக் கொள்ளக் கூடியவருமான தன் தந்தையின் முகத்தில் அந்தச் சமயத்தில் இயற்கையாகவுள்ள துஷ்டத்தனமும், வீரமும் அடியோடு மறைந்து விட்டதையும் பொறுப்பும் கடமையும் தோய்ந்த கவலைத் தோற்றமே அதில் நிரம்பிக் கிடந்ததையும் கண்ட மஞ்சளழகியின் இதயத்தில் தந்தையின் நிலை பற்றிய குழப்பத்தோடு ஆச்சரியமும் கலந்துகொண்டது.

ஸ்ரீவிஜயசாம்ராஜ்யத்தின் உப தளபதியைக்கூடத் தீர்த்துக் கட்டி அவனையும் சித்திரமாகத் தீட்டி ஸ்ரீ விஜயத்தின் சக்தியைக் கூட லட்சியம் செய்யாமல் அதே அறையில் பலரும் பார்க்கும் படியாகப் படத்தை மாட்டி வைத்திருக்கும் நெஞ்சுரமுள்ள தன் தந்தையின் தைரியமெல்லாம் அப்பொழுது பறந்துவிட்டதையும் ஏதோ பெரும் மனச்சுமையொன்று அவர் சித்தத்தை அழுத்திக் கொண்டிருப்பதையும் கவனித்த மஞ்சழகி, 'தந்தையின் இதயச் சுமை எதுவாயிருக்கும்' என்று தன்னைத் தானே ஒரு விநாடி கேட்டுக் கொண்டு விடை காணாமல் தவித்தான்.

(தொடரும்...)

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 07

## எழுத்தும் - எழுத்தாளரும்

பழையது மாறுகிறது; பார்வை மாறுகிறது. இலக்கியம் புதிய உள்ளீடுகளை வேண்டி நிற்கிறது.

ஏற்கெனவே, நான் எழுதியிருப்பதைப் போல் வாழ்க்கையிலிருந்து சில நூற்றாண்டுகள் வெளியே இருக்கும் விஷயங்களால் கவிதையோ, தேசமோ கௌரவம் பெறாது.

இன்று கவிதைகளின் நிலைமை ஆரோக்கியமாய் இல்லை.



அட்டைகளைக் கிழித்து விட்டால் எல்லாப் பத்திரிகைகளும் ஒரே மாதிரியாய் இருப்பது மாதிரி படைத்தவன் பெயரை அடித்துவிட்டால் அத்தனை கவிதைகளும் ஒரே மாதிரிதான் இருக்கின்றன.

கவிதைகள் மனசிலிருந்து பிறக்காமல், கவிதைகள் கவிதைகளிலிருந்து பிறக்கின்றன. வாழை மரத்திற்கு இன்ன மாதத்தில் உரம் வைத்தால் இன்ன மாதத்தில் குலை தள்ளும் என்று கவனித்துச் சொல்வது மாதிரியன்று கவிதை. அது மனோபாவத்தின் குழந்தை. ஒரு படைப்பாளன் தன்னுள் மூடிவைத்த உணர்ச்சிகளைத் தாங்க முடியாத போது அதை மொழியில் இறக்கி வைக்கிறான்.

அந்த உணர்ச்சி மெய்யுணர்ச்சியாயின் தனக்கான வார்த்தைகளையும், வடிவத்தையும் அதுதானனே தேர்ந்தெடுத்துக் கொள்கிறது.

'ஜீர் கஸ்டேலன்' என்ற க்ரோஷியன் கவிஞரின் கவிதையொன்றைப் படித்தபோது இந்த எண்ணம் என் நெஞ்சில் இன்னும் அடர்த்தியாய் அப்பிக் கொண்டது.

**"அம்மா!**
**போர்க்களத்திலிருந்து நுரை தள்ளத் தள்ளத்**
**தனியாய் வரும் என் குதிரைக்குத் தண்ணீர் கொடு!**
**அதன் முதுகைத் தடவிக்கொடு!**
**அது இன்னொரு வீரனுக்குப் பயன் படட்டும்**

**திரும்பிவந்த குதிரையின் மேல்**
**என்னைக் காணாமல் கண்ணீர் சிந்தி**
**என் சவக்குழியைத் தேடாதே!**

**சுதந்திரம் அமைந்த இந்நாடு**
**உன் மைந்தனின் இன்னொரு வடிவமன்றோ?"**

இந்தக் கவிதையிலும் ஓர் உத்தி இருக்கத்தான் செய்கிறது.

அது, உணர்ச்சியைப் பன்மடங்கு பெருக்கிக்காட்டவே பயன்படுகிறது. ஆனால் அந்த உணர்ச்சி என்பது உத்தியினால் வந்ததன்று; உணர்ச்சிதான் உத்தியை இழுத்து வந்திருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு படைப்பாளனுக்குப் படிப்பை விட பார்வைகளே முக்கியம். பார்வைகளைக் கூர்மைப்படுத்தவே படிப்பு.

விமர்சனங்களால் விழுந்து விடாத உள்ளம் இளம் படைப்பாளனுக்க இருக்க வேண்டும்.

புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி சமகால விமர்சனங்கள் எவ்வயும் சரியாக இருப்பதில்லை.

இங்கே, விமர்சனம் என்பது பெரும்பாலும் படைப்பாளனுக்கும் விமர்சகனுக்ககுமிடையேயான உறவைப் பொறுத்ததாய் இருக்கிறது. அதிகமாகப் புகழப்படுகிற போது ஐயப்படவும் அதிகமாய் இகழப்படுகிறபோது சிரித்து விட வும், நம் படைப்பாளிகள் பழகிக் கொள்ள வேண்டும்.

விமர்சகன் என்பவன் ஒட்டகம், கனிகளை விட்டு விட்டு முட்களை மேய்ந்து கொண்டிருப்பவன்."

என்ற வாசகத்தின் நகைச் சுவைக்குக் கீழேயிருக்கும் உண்மையையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 348

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நல்ல தூக்கம் உடல் நலத்தைக் காக்கும்

நவீன யுகத்தில் இயந்திர மயமான வாழ்க்கையால் மனிதன் தன்னை மாற்றிக் கொண்டே வருகிறான். ஒவ்வொரு நாளும் விதவிதமான பிரச்சினைகளில் சிக்கும் போது தன்னை மறந்த நிலையில் ஆறுதலுக்காக பல வழிகளை நாடுகிறான். அதனால் தூக்கம் கெடுகிறது. தொலைந்த தூக்கத்தை சமாளிப்பதற்கு கையாளும் முறைகளால் மேலும் சிக்கல் ஏற்படுகிறது என்பதை மறந்து விடுகிறான். விளைவு பல நோய்களுக்கு அடிமையாகிப் போகிறான்.

நாம் தூங்கும்போது தான் நமது உடலின் தினசரி பராமரிப்பு பணிகள் நடைபெறுகின்றன. அத்தகைய தூக்கம் தரமானதாக அமையாத போது தான் நம் உடலில் கழிவுகள் தேங்கி உடல் உபாதைகள் ஏற்படுகின்றன. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தூக்கத்தின் தரமும் அவசியமானதாகும்.

பெரும்பாலும் மக்கள் இதை உணராமல் இருக்கிறார்கள். நாம் இரவு ஒன்பது மணி அல்லது பத்து மணிக்கு படுத்து தூங்குவதாக சொல்ல முடியுமா? கடந்த இருபது ஆண்டுகளில் நாம் தூங்கச் செல்லும் நேரத்தின் சராசரி அளவு தள்ளிப்போய்க்கொண்டே இருக்கிறது.

எட்டு மணிக்குள் இரவு உணவு உண்டுவிட்டு எட்டரைக்குள் வெளிச்சம் அணைத்து பேசிக் கொண்டே படுக்கையில் விழுந்தால் ஒன்பது மணிக்குள் தூங்கியது ஒரு காலம். ஆனால் இன்று ஒன்பது மணியென்பது மாறி பத்து மணி நள்ளிரவாகி இப்போது அதிகாலையாகி விட்டது. இரவு வேலையின் காரணமாக கண் விழித்திருப்பது என்பது என்றோ ஒருநாள் தூக்கம் வராமல் இருப்பது என்பது மாறிப் போய் விட்டது. எக்காரணமுமில்லாமல் தொடர்ந்து இரவுகளில் கண் விழிப்போர் பெருகிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இதன் விளைவு அண்மையில் புதிது புதிதாக பெருகிவருகின்ற உடல் உபாதைகள் உடல் நலக்கேடுகள். இரவு தூக்கம் தள்ளிப் போவதற்கும் உடலில் ஏற்படும் தொந்தரவுகளுக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

இரவு தூக்கம் ஏன் தள்ளிப் போகிறது நமக்கு ஏன் தூக்கம் வருவதில்லை. இதற்கு நமது உடல் பிரச்சினைகள் மனக்கவலைகள் தான் காரணம் என்று நாம் எண்ணலாம். அது உண்மையில்லை. இரவு முழுவதும் முழுக்க முழுக்க டிஜிட்டல் சந்தை, டிஜிட்டல் பொருட்களை நாம் சரியாக அணுகத் தெரியாமல் தடுமாறுவதையே வியாபாரம் ஆக்கி வருகிறார்கள். அதிகரித்து வரும் அன்றாட செலவீனங்கள் மற்றும் குடும்ப கடமைகளை சமாளிக்க நமக்கு பிடிக்காத வேலைகளையும் செய்கிறோம். அதுவும் தொழிலாளர் சட்டத்தை மதித்து எட்டு மணிநேரம் என்பதெல்லாம் இப்போது இல்லாமல் மாறிவருகிறது.



பத்து மணி நேரம் உழைக்க வேண்டும். அதிலும் டார்கெட் முடிக்க வேண்டும். மன உளைச்சல் தரும் இந்த வேலையை செய்து விட்டு வெளியே வந்தால் இன்னும் பிரச்சனைகள். எனவே சோர்வுடன் வீட்டுக்கு வந்ததும் டிவியை ஆன் செய்துவிட்டு விடுகிறார்கள். டிவியில் வரும் மாய வண்ணக் காட்சிகளில் மனம் பரந்து விரிகிறது. கவலையை மறைக்க சில நேரங்கள் செல்கிறது. இதில் இளம் வயதினர் முதல் பலரும் ஆட்படுகின்றனர்.

ஆனால் இன்று அதையும் விட்டு ஸ்மார்ட் போனில் மூழ்கி பேஸ்புக் வாட்சப் பார்ப்பது அதிகரித்து வருகிறது. சமூக வலைத்தளங்களில் மூழ்கி அதிலே உலா சென்று விட்டால் நேரம் போவதே தெரிவதில்லை.

முன்பெல்லாம் இரவு உணவு முடிந்த பின்பு திண்ணையில் நண்பர்களோடு குடும்பத்தோடு பேசி விட்டு உறங்கச் செல்லும் காலம் போய் வீட்டுத் திண்ணை வாட்ஸ் அப் ஆகிறது. அந்த உரையாடலில் நேரம் போவதே தெரிவதில்லை. சொந்த வீட்டிற்குள் இருந்து கொண்டே சமூக வலைத்தளங்களில் தொடர்பு கொள்ளும் நிலையும் இருக்கிறது. தினமும் நள்ளிரவு தாண்டிய பின்பு குட்மார்னிங் சொல்லி விட்டுத்தான் படுக்கைக்கு செல்கிறார்கள்.

இரவில் தூங்கிக் கொண்டிருக்கும்போது எழுந்து பேஸ்புக்கில் போட்ட போட்டோவுக்கு எத்தனை லைக் விழுந்துள்ளது என்று பார்ப்பவர்களும் உண்டு. வாட்ஸ் அப்பில் மெசேஜ் வந்துள்ளதா என அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதை கம்பல்சிவ் பிகேவியர் (compulsive behavior) என்று சொல்லப்படும் ஒருவகையான மனநலப் பிரச்சினை என்றும் கண்டிஷனல் இன்சோம்னியா (Conditional Insomnia) எனும் தூக்கமின்மை நோய் என்றும் சொல்கிறார்கள்.

பலர் தினமும் காலையில் விழித்ததும் செய்யும் முதல் வேலை மொபைலை எடுத்து இன்டர்நெட்டை ஒன் செய்து வட்ஸ் அப் பில் ஏதாவது மெசேஜ் வந்துள் ளதா என பாரக்கும் நிலை அதிக ரித்து வருகிறது. இரவு தூக்கம் தடைப்படுவதால் ஏராளமான உடல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நமது உடலுக்குள் சுழற்சிக் கடிகாரம் இருக்கிறது. இரவு நெடு நேரம் கழித்து தூங்குவதாலும் ஆழ்நிலை தூக்கம் இல்லாமல் மேலோட்டமாய் தூங்கினால் பல நோய்கள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும்.

இதனால் சோர்வு பதற்றம் ஆகியனவும் மனநலம் சார்ந்த பல பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது. தரமான தூக்கத்திற்கு இயற்கை காற்றோட்டம் அவசியம். எனவே இரவில் ஜன்னலை திறந்து வைத்து தூங்குவது நல்லது. கொசுவர்த்தி சுருள், கொசுவிரட்டுவதற்கு பயன்படுத்தும் இரசாயனங்களை தவிர்க்க வேண்டும்.

எளிதில் செரிமானமாகக் கூடிய உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும். உணவு சரியாக செரிமானம் ஆகவில்லை என்றாலும் தூக்கம் பாதிக்கப்படும். நண்பர்களுக்கு மொபைலுக்கு டிவிக்கு என நேரம் ஒதுக்குவதில் தவறு இல்லை. உடலுக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தூக்கத்தை பாதிக்கும் காரணிகள் வெளிச்சம், புகைப்பழக்கம், டீ, கோப்பி, செயற்கை குளிர்பானங்கள் போன்றவை.

எனவே தேவையற்றவற்றை தவிர்ப்போம். நல்ல தூக்கமே உடல் நலத்தை காக்கும் என்பதனை உணர்வோம். மன அழுத்தம், உடல் பருமனாவது, இதய நோய்கள், நரம்பு சம்பந்தமான நோய்கள் இவற்றிலிருந்தும் விடுதலை அடைவோம். நம்மோடு வாழ நாம் நம்மை தயாரிப்போம். நம்மை காத்துக் கொள்வோம்.

Dr.M.அரவிந்தன்
நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான உமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இளைஞன் மீது கொடூர தாக்குதல்

## கை கால்களை துண்டாக்கிய கும்பல்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக நபர் ஒருவர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹங்வெல்ல, கஹாஹேன பிரதேசத்தில் ஏற்பட்ட வாக்கு வாதத்தின் பின்னர் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதலில் 25 வயதுடைய இளைஞனின் கைகள் மற்றும் கால்கள் உடலில் இருந்து துண்டாகியது.

காயமடைந்தவர் ஹன்வெல்ல, கஹாஹேன, அஜித் பெரேரா மாவத்தையில் வசிக்கும் 25 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியில் சென்று கொண்டிருந்த போது கூரிய ஆயுதத்துடன் வந்த நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் தப்பியோட முற்பட்ட வேளையில் கால்களில் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக, அவரது வலது கால் உடலில் இருந்து துண்டானதுடன் கைகளும் பிரிந்து துண்டாகியுள்ளது. (4)

## அபிவிருத்தி லொத்தர் சபையின் சீட்டிழுப்பு

# வடமராட்சியை சேர்ந்தவருக்கு 20 இலட்சம் ரூபாய்

(கரணவாய்)

அபிவிருத்தி லொத்தர் சபையின் வலம்புரி சீட்டிழுப்பில் வடமராட்சி வாசி ஒருவருக்கு 20 இலட்சம் ரூபாய் அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

இச் சீட்டிழுப்பில் புலோலி, மந்திகை முகவரான இரா மச்சந்திரன் சுதர்சனினால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்ட லாப சீட்டுக்கே இவ் அதிர்ஷ்டம் அடித்துள்ளது. (4-60)

# புலம்பெயர் தொழிலாளர்களால் ஏப்ரலில் 454 மில்.டொலர்

(கொழும்பு)

2023 ஏப்ரல் மாதத்திற்கான இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணம் 454 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அறிவித்துள்ளார்.

தமது டுவிட்டரில் பதிவிலே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2022 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 83.4% அதிகமாகும் என்றும், பணம் அனுப்பிய தொகை 248.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மொத்தமாக அனுப்பப்பட்ட தொகை 1867.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# இலங்கை தாதியர்களுக்கு வெளிநாட்டில் வரவேற்பு

## ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல

(கொழும்பு)

சுகாதாரத்துறை சார்ந்த சுற்றுலாக்கள் மூலமும் நாட்டிற்கு வருமானம் கிடைக்குமென தாம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிமனையின் தலைவருமான சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தாதியர் தினத்தை முன்னிட்டு கொழும்பு அறக்கட்டளையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை போன்ற அழகிய சூழலைக் கொண்ட நாட்டில் "சுகாதார சுற்றுலா" மிகவும் சாதகமானது எனவும் தாதியர் துறையில் புதிய திட்டங்களை உருவாக்கி நாட்டுக்கு வருமானம் ஈட்ட புதிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்கள் ஏற்கனவே இந்த நாட்டிற்கு வந்து வைத்தியர்களை பார்த்து செல்வதாக குறிப்பிட்டார்.

இலங்கை தாதியர்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளதாகவும் மொழிப்பிரச்சினை காரணமாக அவ்வாறான வாய்ப்புகள் இக்கப்படுவதாகவும் சாகலரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# சம்பிக்கவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை நீக்கி கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் தனது மகளைப் பார்ப்பதற்காக கனடா செல்ல விரும்புவதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்தை தடுக்க தவறியமை மற்றும் சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் சம்பிக்க ரணவக்கவுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டது.

அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலித்த உயர்நீதிமன்றம், 13 முதல் செப்டெம்பர் 23 வரை வெளிநாட்டு பயணங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டது. (4)

# சகல பேருந்துகளுக்கும் ஜி.பி.எஸ் பொருத்த முடிவு




(கொழும்பு)

அனைத்து மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளுக்கும் ஜி.பி.எஸ் கருவிகளை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒன்று அளவிலான பேருந்துகளுக்கு ஏற்கனவே ஜி.பி.எஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாக நிலான் மிராண்டா மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பொருத்தப்படுகின்ற ஜி.பி.எஸ் கருவிகளால், பேருந்துகள் நீண்டநேரம் பேருந்து தரிப்பு நிலையங்களில் நிறுத்த முடியாது எனவும் நிலான் மிராண்டா குறிப்பிட்டுள்ளார். (4)

## அரச நிறுவனங்களில்

# கைவிரல் அடையாள பதிவு நாளை முதல் கட்டாயம்

(கொழும்பு)

அரச ஊழியர்கள் நாளை திங்கட்கிழமை முதல் அலுவலகங்களுக்குள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரினால் அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் தொற்று உள்ளிட்ட பல்வேறு சிரமங்கள் காரணமாக, அரச ஊழியர்கள் பணிக்கு சமுகமளிக்கும் விடயங்களில் விசேட சுற்றறிக்கைகள் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போது நிலவும் சுமுகமான சூழ்நிலையில் அதற்கான தேவைகள் இல்லாத காரணத்தினால் இப்புதிய சுற்றுநிருபம் திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்படவிருப்பதாக அமைச்சின் செயலாளர் கே. டி. என்.ரஞ்சித் அசோக தெரிவித்துள்ளார்.

# இலங்கை தாதியர்கள் சிங்கப்பூரில் பணியாற்ற அரிய வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கைத் பயிற்சி பெற்ற தாதியர்களுக்கு சிங்கப்பூரில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளது.

அதன்படி, தாதியர் மற்றும் பணி அனுபவத்தில் பட்டம் அல்லது டிப்ளமா பெற்ற வல்லுநர்கள், அதே போல் பொது தாதியர் கல்லூரிகளில் பயிற்சி மற்றும் பணி அனுபவம் உள்ள தாதியர்கள் சிங்கப்பூர் பொது மருத்துவமனைகளில் தாதியர் தொழிலில் சேரலாம் என கூறப்படுகின்றது.

இலங்கைத் தாதியர்கள் சிங்கப்பூர் அரசு மருத்துவமனைகளில் இதன்படி சிங்கப்பூர் வேலைக்கான தகைமை களை பூர்த்தி செய்து வேலை பெற்ற முதல் குழுவைச் சேர்ந்த 36 தாதியர்களுக்கு விமான டிக்கெட் வழங்கும் நிகழ்வு நேற்று (12) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. விண்ணப்பதாரர்கள் எந்த கட்டணமும் இல்லாமல் இந்த வேலைகளை அணுகுவதற்கான வாய்ப்பைப் பெறுவர்கள் மற்றும் விண்ணப்பதாரர்கள் சிங்கப்பூர் தாதியர் வாரியம் நடத்தும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்புகளை நடத்தும் இலங்கை வேலைவாய்ப்பு முகவர் அமைப்பின் கூற்றுப்படி, தகுதிவாய்ந்த தாதியர்கள் இரண்டு வருட ஒப்பந்த காலத்திற்கு மாதாந்தம் மூன்றரை முதல் ஐந்து இலட்சம் ரூபா வரை சம்பளம் பெற முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை சிங்கப்பூருக்குள் சென்ற பின்னர் வேலை தேடுபவர்களுக்கு ஒரு முறை 1000 சிங்கப்பூர் டாலர்கள் மற்றும் தங்குமிடத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் ஆட்சேர்ப்பு நிறுவனம் கூறியது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான்கானுக்கு 2 வாரங்கள் பிணை இஸ்லாமாபாத் நீதிமன்றம் உத்தரவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான். முன்னாள் பிரமதமர் இம்ரான்கானுக்கு அல் காதிர் அறக்கட்டளை வழக்கில் 2 வார கால பிணை வழங்கி இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

தனக்கு எதிரான வழக்குத் தொடர்பில் முன்பிணை கோருவதற்காக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்துக்கு இம்ரான்கான் கடந்த செவ்வாய்க்கிழமை சென்றிருந்த போது அவரை துணை இராணுவத்தினர் கைது செய்தனர்.

அல்காதிர் அறக்கட்டளையில் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொறுப்புடைமை பணியகத்தினால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை 8 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு தேசிய பொறுப்புடைமை நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

இம்ரான் கைதையடுத்து அவரின் பிரிஜ கட்சி ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. இதனால் குறைந்தபட்சம் 8 பேர் பலியானதுடன் சுமார் 300 பேர் காயமடைந்தனர்.

இதற்கிடையே நீதிமன்ற வளாகத்தில் இம்ரான்கான் கைது செய்யப்பட்டதை எதிர்த்து அவரது சட்டத்தரணிகள் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தனர். இந்த மனு விசாரணைக்கு வந்தபோது இம்ரான்கான் கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும் அவரை வீடு திரும்ப அனுமதிக்கவில்லை. இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் இம்ரான்கானை ஆஜராக உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம் அது வரை இம்ரான்கான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இஸ்லாமாபாத் பொலிஸ் தலைமையக வளாகத்திலேயே ஒரு "வதிவாளராக" தங்கியிருக்குமாறு உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் இம்ரான்கான் ஆஜரானார். அவரின் பிணை மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் 2 வார காலத்துக்கு இம்ரான் கானுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது. (4)

# பூமியின் வளிமண்டலத்தில் தோன்றிய மர்மச் சத்தங்கள்

## விஞ்ஞானிகள் ஆய்வு



(வோஷிங்டன்)

பூமியின் வளிமண்டலத்தில் உருவான மர்மச் சத்தங்களை விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளனர். பூமியின் அடுக்கு மண்டலத்தின் ஒலிகளை பதிவு செய்ய ராட்சத பலூன்கள் 70 ஆயிரம் அடி உயரத்துக்கு அனுப்பப்பட்டன. ஸ்ட்ரா டோஸ்பியர் என்பது பூமியின் வளிமண்டலத்தின் 2 ஆவது அடுக்கு ஆகும்.

அதன் கீழ் மட்டத்தில் ஓசோன் படலம் உள்ளது. இந்த அடுக்கு மண்டலத்தில் ஒலிகளை பதிவு செய்யப்பட பலூனில் மைக்ரோபோன்கள் உள்ளிட்ட நவீன கருவிகள் பொருத்தப்பட்டன. இந்த பலூன்கள் முதலில் எரிமலைகளை கண்காணிக்க வடிவமைக்கப்பட்டு இருந்தது.

பூமியின் அடுக்கு மண்டலத்துக்கு சென்ற ராட்சத பலூன்கள் அங்கு தோன்றும் ஒலிகளை பதிவு செய்தது. அந்த ஒலிகளை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அதில் மர்மமான சத்தங்கள் பதிவாகி இருப்பது தெரிய வந்தது. இந்த மர்ம ஒலிகள் குறித்து அமெரிக்காவின் சிகாகோவில் நடந்த ஒலியியல் சங்கத்தின் 184 ஆவது கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆராய்ச்சியாளர் டேனியல் போமன் கூறும்போது, பூமியின் வளிமண்டலத்தில் அடையாளம் காண முடியாத சில விசித்திரமான ஒலிகளும் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. சில முறை மர்மமான சிக்னல்கள் ஏற்பட்டன. ஆனால் இவற்றின் ஆதாரம் முற்றிலும் தெரியவில்லை என்றார். (4)

# துருக்கியில் துப்பாக்கிச் சூடு ஐவர் பரிதாபமாக உயிரிழப்பு

(அங்காரா)

துருக்கி நாட்டின் இஸ்மிர் மாகாணம் மென்டெரெஸ் பகுதியில் உள்ள டீக் கடையில் நின்ற இரு தரப்பினர் கடன் கொடுக்கல் வாங்கல் குறித்து பேசிக் கொண்டிருந்தனர்.

இதில் அவர்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில், தகராறு முற்றியதில் ஆத்திரம் அடைந்த ஒரு தரப்பினர் திடீரென துப்பாக்கியை எடுத்து சுட ஆரம்பித்தனர். இதனால் அங்கிருந்தோர் நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 2 பேர் படுகாயம் அடைந்தனர். இதுகுறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். டீக்கடையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (4)

# கலிபோர்னியாவில் நிலநடுக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கிழக்குப் பகுதியின் தென்மேற்கே 4 கி.மீ தொலைவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 5.5 புள்ளி களாக பதிவானது. கடல் மட்டத்தில் இருந்து 1.5 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்க பாதிப்புகள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (4)

# மாரடைப்பால் விழுந்த நபரின் உயிரைக் காப்பாற்றிய நாய்





(டோக்கியோ)

மாரடைப்பால் சுருண்டு விழுந்த நபரின் உயிரை காப்பாற்றிய நாய் ஒன்றுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் ஜப்பானில் இடம்பெற்றுள்ளது.

5 வயதான கௌமே என்ற நாய்க்கே இவ்வாறு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சிபா நகரில் உள்ள வகாபா -குவில் உள்ள குதிரையேற்ற கிளப்பில் 50 வயதுடைய நபர் மாரடைப்பால் நெஞ்சைப் பிடித்தபடி நிலைகுலைந்து கீழே விழுந்துள்ளார்.

இதனை கௌமே கண்டுள்ளது. ஐந்தே வயதான கௌமே சாதுரியமாக செயற்பட்டு இடைவிடாது தொடர்ந்து குரைத்துள்ளது.

இதனால் நீண்ட நேரமாக நாய் குரைத்துக் கொண்டே இருந்தமையால், அருகில் இருந்தவர்கள் விரைந்து வந்து பார்த்துள்ளனர்.

அப்பொழுது, அந்நபருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதுடன், உடனடியாக அவரை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இதை தொடர்ந்து கௌமே என்ற அந்த நாய்க்கு அவரது உயிரை காப்பாற்றியமையால் விருது வழங்கி கௌரவித்துள்ளனர். (4)

# தேர்வுத் தாள்களை எரித்த பள்ளி ஆசிரியருக்கு 10 ஆண்டு சிறை

(பாரீஸ்)

பிரான்ஸில் உள்ள பாரீஸ் தொழிற்கல்வி பள்ளிக்கு வெளியே 63 தேர்வுத் தாள்களை எரித்த ஆசிரியருக்கு சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் உள்ள உயர் நிலைப் பள்ளி ஆசிரியர் விக்டர் இம்மோர்டினோ என்பவர், கடந்த செவ்வாய்க்கிழமை அன்று பாரீஸ் தொழிற் கல்வி பள்ளிக்கு வெளியே 63 தேர்வுத் தாள்களை தீ வைத்து எரித்துள்ளார்.

இதுதொடர்பாக விக்டர் மீது தொடரப்பட்ட வழக்கின் கீழ் விசாரணை நடத்தப்பட்டது. இந்நிலையில் ஆசிரியர் விக்டர் இம்மோர்டினோவுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 1.31 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுவதாக பிரெஞ்சு வழக்கறிஞர் அலுவலகம் மற்றும் கல்வி வாரியம் தெரிவித்தது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகில் எப்போதும் நிலைத்திருக்கும் சக்தி உண்மைக்குத்தான் உண்டு.
~ கௌதம புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பௌத்த பிக்குகளில் ஒரு புனிதரைக் கண்டேன்

வடக்குக் கிழக்கில் எதற்குப் பௌத்த விகாரை. புதிது புதிதாக விகாரைகளை அமைத்து என்ன செய்யப் போகின்றீர்கள்.

படையினரின் பணி சாமி வேலையா? அவர்கள் எதற்காக விகாரைகளை அமைக்க வேண்டும். அவர்கள் தங்களின் கடமைகளைச் செய்வதுதான் நல்லது.

தனியார் காணிகளில் விகாரைகளை அமைப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இவ்வாறு கூறியவர் வேறுயாருமல்ல, நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதி பதுமகீர்த்தி திசாநாயக்க தேரர் அவர்கள்.

தேரர் அவர்கள் முன்வைத்த கேள்விகள் மிகவும் யதார்த்தமானவை.

இவ்வாறான கேள்விகளை நம் தமிழ்த் தலைவர்கள்கூட இதுவரை கேட்டதில்லை.

வடக்கில் பௌத்த சிங்களவர்கள் இல்லாதபோது அங்கு விகாரைகளை அமைப்பது எதற்காக? என்ற நயினாதீவு நாகவிகாராதிபதியின் கேள்விக்குப் பௌத்த பீடங்கள் பதிலளித்தாக வேண்டும்.

அதேநேரம் நெடுந்தீவு மற்றும் மாதகல் பகுதிகளில் விகாரைகளை அமைப்பதற்காக வந்தவர்களை நான் துரத்திவிட்டேன்.

அநுராதபுரத்துக்கு அப்பால் எத்தனையோ விகாரைகள் கவனிப்பாராற்றுக் கிடக்கின்றன.

அவற்றைக் கவனிப்பதிலேயே பௌத்த பிக்குகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நயினை நாகவிகாராதிபதி கூறியுள்ளார்.

விகாராதிபதியின் மேற்போந்த கருத்தை தமிழ்த் தரப்புகள் ஆவணப்படுத்த வேண்டும்.

வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அதனைத் தெரியப்படுத்த வேண்டும்.

வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட வகையில் பௌத்த விகாரைகள் அமைப்பதன் மூலம், தமிழர் தேசத்தின் இறையாண்மைக்குப் பங்கம் ஏற்படுத்துவதும் தமிழ் மக்களின் வரலாற்றைத் திரிவுபடுத்துவதுமே நோக்கமாகும்.

எனவே மேற்போந்த செயலை எதிர்த்தாக வேண்டும். இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளில் உண்மையை எடுத்தியம்பவல்ல நயினை நாகவிகாரையின் விகாராதிபதி போன்றவர்களை உள்வாங்குவது கட்டாயமானதென்பதோடு இவை ஒருபுறமிருக்க, பௌத்த பிக்குகள் என்றால், அனைவரும் ஒரே மாதிரியானவர்கள். அவர்களிடம் பௌத்த சிங்கள மேலாதிக்கம் ஓங்கியிருக்கும் என்பதே எங்களின் பொதுவான எண்ணக் கருத்தாக இருந்தது.

ஆனால் அந்த எண்ணக்கருத்தை மாற்றியமைக்கும் வகையில் நயினாதீவு நாக விகாராதிபதி பதும கீர்த்தி திசாநாயக்க தேரர் அவர்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

ஆம், பௌத்த தத்துவத்தை தோற்றுவித்த கௌதம புத்தபிரான் உலகப்பற்று நீக்கி பரிநிர்வாணம் அடைந்த முத்தர்.

அவரின் போதனைகள் அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செலுத்துவதாகும்.

அப்பெரும் ஞானியாகிய கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பிக்குகள்கூட பின்பற்றவில்லையே என்ற கவலையின் மத்தியில், நயினாதீவு நாகவிகாராதிபதியின் உண்மையான கருத்துக்கள் அவரை பௌத்த பிக்குகளில் ஒரு புனிதராக அடையாளப் படுத்தியுள்ளது என்றால் அது மிகையன்று.

# வவுனியாவில் திடீரென தீப்பிடித்த மோ.சைக்கிள்

(வவுனியா)

வவுனியா நகர மத்தியில் நேற்று மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிலொன்று திடீரென தீப்பற்றிய நிலையில் அதில் பயணித்தவர்கள் எவ்வித பாதிப்புமின்றி உயிர் தப்பியிருந்தனர்.

ஏ9 வீதியுடாக பயணித்துக்கொண்டிருந்த TVS சாம் ரக மோட்டார் சைக்கிள் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அண்மித்த பகுதியில் திடீரென தீப்பற்றியெரிந்துள்ளது.

அதில் பயணித்த கணவன்,மனைவி பிள்ளைக்கு எவ்வித உயிராபத்தும் ஏற்படவில்லை என்பதுடன் தீப்பற்றிய மோட்டார் சைக்கிள் பொதுமக்களின் மிகுந்த போராட்டத்திற்கு மத்தியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் இச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (ம-7,9)

# சீனி மற்றும் மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

சீனி மற்றும் மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கங்களுடனான கலந்துரையாடலின் போது இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இறக்குமதியாளர்களிடம் காணப்படும் சீனி கையிருப்பு தொடர்பில் ஆராயுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த சந்தர்ப்பத்தில் விலை அதிகரிப்பை மேற்கொள்ளாதிருக்குமாறு தாம் விடுத்த கோரிக்கையை இறக்குமதியாளர்கள் ஏற்றுக்கொண்டதற்கமைய அடுத்த ஒரு மாதத்திற்கு சீனி விலை அதிகரிப்பு தொடர்பான சிக்கல் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கோதுமை மா கிலோகிராம் ஒன்றின் விலையையும் 195 ரூபாவை விட அதிகரிக்காதிருக்கவும் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை குறைவடைந்துள்ளமைக்கு அமைய வரி அதிகரிக்கப்பட்டாலும் கோதுமை மாவின் விலையை அதிகரிக்காதிருக்குமாறு நளின் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட உப குழுவின் ஊடாக முட்டை இறக்குமதி தொடர்பில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ம-7,9)

# தாக்குதல் நடத்தி ரிக்ரொக்கில் காணொளி

## சந்தேகநபர்களுக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டி அதன் வீடியோவை ஒளிப்பதிவு பண்ணி சமூக வலைத் தளத்தில் ரிக்ரொக் பதிவிட்ட எட்டு பேரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் மேற்படி நபர்[illegible] [illegible] ரிக்ரொக் செய்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டமை தொடர்பில் நெல்லியடி பகுதியில் வைத்து எட்டு பேரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு காங்கேசன்துறை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ததுடன் வாள், கோடரி என்பவற்றையும் மீட்டனர்.

எட்டு பேரையும் நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை பதில் நீதவான் நடராஜா ரஜீவனின் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்ட போது எட்டு பேரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்க மறியல் [illegible] உத்தரவிட்டார். (ம-7,9)

# சீனிப்பாணியை தேன் என விற்பனை செய்தவர்

## வவுனியாவில் கைது

வவுனியாவில் சீனிப்பாணியினை காய்ச்சிதேன் என விற்பனை செய்த நபரை சுகாதாரப் பிரிவினர் நேற்றுக் காலை சுற்றிவளைத்ததுடன் அவரிடமிருந்து 263 போத்தல் சீனிப்பாணியினையும் கைப்பற்றியுள்ளனர்.

தேன் என சீனிப்பாணியினை விற்பனை செய்கின்றமை தொடர்பில் வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த வீட்டினை சுற்றிவளைத்தனர்.

இதன் போது குறித்த வீட்டில் விற்பனைக்கு தயாரான முறையில் காணப்பட்ட 263 போத்தல்களில் அடைக்கப்பட்ட சீனிப்பாணியினை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றியதுடன் சீனிப் பாணி தயாரிக்க பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் கைப்பற்றினர்.

சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட 263 போத்தல்களில் (750மில்லி லீற்றர் போத்தல்) அடைக்கப்பட்ட சீனிப்பாணி பொருட்கள் என்பன வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட சமயத்தில் சந்தேக நபரை ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார். (ம-7,9)

# சாரதி உறக்கம் 7 மாத குழந்தை பலி

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை - தங்காலை பொலிஸ் பிரிவில் வாகன விபத்தில் 7 மாத குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் தாய் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது, தங்காலைப் பகுதியிலிருந்து அங்குனுகொலபெலஸ்ஸ நோக்கிப் பயணித்த வான் ஒன்றும் ரன்னவிலிருந்து தங்காலை நோக்கி வந்த லொறி ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் வானில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர். அதேவேளை லொறியின் சாரதியும் காயமடைந்துள்ளார்.

இந்நிலையில் வானில் பயணித்த ஐந்து பேரும் லொறியின் சாரதியும் தங்காலை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து வானில் பயணித்த குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

லொறியின் சாரதி உறங்கியமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,9)

# கசிப்பு உற்பத்தி இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் ஆனைக் கோட்டைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸாரினால் முற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களிடம் இருந்து 6.5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

# தாச்சி இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 27வது ஆண்டுக்கான மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று பி.ப 3.30 மணிக்கு யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தலைவர் பீ.ஜெயவிந்தன் தலைமையில் நவாலி தென்றல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர்(காணி) S.முரளிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இறுதிப்போட்டியில்தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகம், புதுமடம் வைகரை விளையாட்டுக் கழகம் என்பன மோதவுள்ளன. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெண் பிள்ளைகளை கடத்த முயற்சி

# கைது செய்யப்பட்ட இருவரும் 18 வரை விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னாரில் 3 பிள்ளைகளை கடத்த முயன்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வீதியால் சென்ற மூன்று பெண் பிள்ளைகளை வீதியில் சென்ற வாகனத்தில் பயணித்த இருவர் கடத்துவதற்கு முற்பட்டுள்ளதாக தலை மன்னார் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் அந்த ஊருக்கு பொருட்கள் விற்பனைக்காக வரும் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரையும் தலைமன்னார் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த சம்பவம் இடம்பெற்ற பின்னரும் அவர்கள் அந்த ஊரில் உள்ள கடைகளுக்கு பொருட்கள் விற்பனை செய்ததாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்தது.

அவர்களிடம் மேலும் மேற்கொண்ட விசாரணையின்போது, தாங்கள் கடைகளுக்கான பொருட்கள் விற்பனைக்காக கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த ஊருக்கு வருவதாக தெரிவித்தனர்.

அதன்பின்னர் அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டவேளை அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-104)

# மீண்டும் குறைவடைந்த கச்சா எண்ணெய் விலை

(கொழும்பு)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது.

அதன்படி நேற்று பிரித்தானிய பிரெண்ட் சந்தையில் கச்சா எண்ணெய் கொள்கலன் ஒன்றின் விலை 74.17 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

அமெரிக்க சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 70.4 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 75 அமெரிக்க டொலர்களாக கச்சா எண்ணெயின் விலை அதிகரித்த நிலையில் தற்போது குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# கிளிநொச்சியில் நெற்செய்கையில் படைப்புழு தாக்கம் அதிகரிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதம் ஆகிய விவசாயிகளின் வயல்களில் சடுதியாக படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி, உருத்திரபுரம், கணேசபுரம், முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு பல்வேறு வகையிலும் அழிவுகள் ஏற்பட்டு வருவதாகவும் இதற்கான கிருமிநாசினி அதிக விலை கொடுத்து பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (4-316)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்றுக்கு யாழ்ப்பாணத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் பிரதேசசெயலகத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை வழங்கி உயிர் காக்கும் உன்னதப் பணியில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அழைப்புவிடுத்துள்ளது. (4-33)

# வன்னி மக்கள் ஒன்றியம் வவுனியாவில் அங்குரார்ப்பணம்



(வவுனியா)

வன்னியில் வாழ்க்கின்ற மூவின மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி வன்னிமக்கள் ஒன்றியம் என்ற அமைப்பு நேற்று அங்குரார்பணம் செய்யப்பட்டது.

குறித்த அமைப்பின் மூலம் இனங்களிற்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளை அடையாளம் காணப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படும்.

அத்துடன் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதுடன் நாடுதழுவிய ரீதியில் இந்த அமைப்பின் செயற்பாடுகளைக் கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது மக்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (4-290)

# முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்து ஊர்திப்பவனி நேற்று ஆரம்பம்



(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்காலில் நமது இனம் பட்ட வேதனைகளையும் இளம் சந்ததியினருக்கு கடத்த முள்ளிவாய்க்கால் நினைவு சுமந்த ஊர்தி பவனி ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதி யுத்த காலப் பகுதியில் கடுமையான செல் தாக்குதல்கள் மற்றும் விமானத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கப்பலடி பகுதியிலிருந்து காலை ஆரம்பமாகிய இந்த ஊர்தி பவனியானது முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் இருந்து வட்டுவாகல் பாலம் ஊடாக முல்லைத்தீவு நகரை வந்தடைந்து அங்கிருந்து முள்ளியவளை ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, புளியங்குளம் ஆகிய பகுதிகளின் மக்கள் அஞ்சலிகள் செலுத்தப்பட்டு இரவு வவுனியாவை சென்றடைந்துள்ளது.

நேற்று முதலாவது நாள் பயணத்தை நிறைவு செய்த இந்த ஊர்தி பவனி ஆனது இன்று வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி பயணிக்க இருக்கின்றது.

இந்த ஊர்தி பவனி ஊடாக தமிழ் மக்கள் மத்தியிலே இந்த இனப்படுகொலை நினைவேந்தல் வாரத்தை இந்த தமிழ் மக்களினுடைய பிள்ளைகள் எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஊர்தி பவனி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட இருக்கின்றது. குறிப்பாக மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு சென்று மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் ஊடாக முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் முற்றத்தை 18 ஆம் திகதி வந்தடைந்து 18 ம் திகதி முள்ளிவாய்க்காலில் இடம்பெறுகின்ற மாபெரும் நினைவேந்தல் நிகழ்விலும் கலந்து கொள்கின்ற நிகழ்வு இடம்பெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 150 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 150 | 150 |
| தக்காளி | 300 | 450 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 240 | 250 | 250 | 300 |
| கரட் | 120 | 200 | 150 | 250 |
| பூசணி | 60 | 80 | 50 | 80 |
| புடோல் | 120 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 450 | 400 |
| வெண்டக்காய் | 120 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 140 | 160 | 200 | 150 |
| லீக்ஸ் | 280 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 250 | 250 | 240 | 300 |
| கறிமிளகாய் | 350 | 200 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 800 |
| போஞ்சி | 450 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 120 | 240 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 400 | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 280 | 300 | 350 |
| வெங்காயப்பூ | -- | -- | 400 | 500 |
| முள்ளங்கி | 80 | 100 | 140 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | -- | 150 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

தில் இருந்து நகரை நோக்கிச் சென்ற உந்துருளி ஒன்று வேப்பங்குளம் பகுதியில் நாய் ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த தனுஜன் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9)

## முல்லையில்...

நேற்று கைவேலிப்பகுதியில் 10 வயதுடைய பாடசாலை சிறுமி தனியார் வகுப்பிற்காக உந்துருளியில் தாயாரினால் அழைத்து வரப்பட்டு இறக்கி விடப்பட்ட நிலையில் வீதியில் உந்துருளியில் சென்ற இளைஞர்கள் சிறுமியினை அழைத்து கையினை பிடித்துக்கொண்டு முகத்தினை துணியால் பொத்திப்பிடித்தபோது சிறுமி மயங்கி விழுந்துள்ளார்.

வீதியால் சென்ற மக்கள் இதனை அவதானித்து சத்தமிட்டபோது இளைஞர்கள் தப்பி ஓடியுள்ளார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் கண் விழித்துக்கொண்ட சிறுமியின் தகவலின் படி குறித்த பகுதியினை சேர்ந்த இளைஞனின் பெயரினை சிறுமி கூறியதற்கு இணங்க கிராம அபிவிருத்தி சங்கத்தினர் இளைஞனை அழைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 23 வயதுடைய 02ஆம் வட்டாரம் கோம்பாவில் பகுதியினை சேர்ந்த இளைஞனை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-7,9)

## வரியை...

எதிர்காலத்தில் வரி வரம்புகள் மாற்றப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7,9)

## இளம் குடும்பப்...

செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை கொலை செய்தவர் என்று கருதப்படும் சந்தேகநபரும் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

ஒரு தலைக் காதலே இதற்கு காரணம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் நியூட்டன் தர்சினி (வயது-26) என்ற ஒருபிள்ளையின் தாயும், சிவபாலன் சுஜானந்தன் (வயது-24) என்ற இளைஞனுமே உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவர் வீடு திரும்பிய போது மனைவி இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தமையைக்கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

எனவே இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் குறித்த பெண் இடியன் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் தேடப்பட்ட இளைஞர் அவரது வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயத்திற்கு முன்பாக சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டுள்ளது. அவரது சடலத்துடன் இடியன் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை உயிரிழந்த இளைஞர் ஒருதலைபட்சமாக காதலித்து வந்துள்ளதாக அயலவர்கள் தெரிவித்ததுடன், அந்தப் பெண் திருமணம் முடித்த பின்னரும் அவருக்கு தொடர்ச்சியான தொந்தரவுகளை கொடுத்து வந்ததாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனவே உயிரிழந்த இளைஞன் இடியன் துப்பாக்கி மூலம் அந்தப் பெண்ணை கொலை செய்ததுடன், தானும் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,299)

## முள்ளிவாய்க்...

தமிழின படுகொலையின் போது உயிர் நீத்தவர்களை நினைவேந்தி வறுமையில் சிக்கியபோது கஞ்சியை மட்டுமே உட்கொண்டு வாழ்ந்த போர்க்கால வாழ்க்கையையும் நினைவுகூரும் வகையில், இந்த வாரம் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்த வகையில், 2009ஆம் ஆண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் இந்த ஆண்டும் நினைவேந்தல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மே 12 முதல் மே 18 வரை அனுஷ்டிக்கப்பட்டு வரும் இனப்படுகொலை வாரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மக்களும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் இணைந்து வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதோடு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. (ம-7,9)

## அரசுக்கு...

அடுத்தே, இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத்திற்குள் சுமார் 750 பேரை கொண்ட குழுவொன்று, அமைதியின்மையை தோற்றுவிக்கும் வகையில் செயற்படவுள்ளதாக இராணுவ புலனாய்வு பிரிவிற்கு தகவலொன்று கிடைத்துள்ளது.

இதையடுத்து, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சுதந்திர சதுக்கம், கொள்ளுப்பிட்டி முச்சந்தி, அலரிமாளிகை உள்ளிட்ட பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,9)

## சரி...

வீதியில் இறங்கி போராடுவதும் வீடுகளை எரிப்பதும் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆகாது எனக் குறிப்பிட்டார்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாடு வங்குரோத்து அடையும்போது மறு சீரமைப்பு தேவைப் படுவதாகவும் நாட்டின் பல நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேவேளை, ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் போன்ற நிறுவனங்களை விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய கல்வி முறை பற்றி சிந்திக்க வேண்டும் என கூறிய ஜனாதிபதி, சிறந்த எதிர்காலத்திற்கு நல்ல பொருளாதாரம் தேவை எனவும் சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-7,9)

## தடுத்து...

படுகிறது.

குறித்த குழுவினால் திருகோணமலை பில் இருந்து கண்டி நோக்கிய பாதை த்திரை இடம்பெறவுள்ளதாகவும் நெரிவிக்கப்படுகிறது.

மேலும் திருகோணமலை வில்லூன்றி முருகன் ஆலயத்துக்கு சொந்தமான காணியை அபகரிப்பதற்கு எதிராக நேற்று முற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தாய்லாந்திலிருந்து பௌத்த பிக்குகளை அழைத்து வந்து குறித்த பகுதியில் புத்தர்சிலை வைக்கப்படவுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, குறித்த பகுதியில் பொதுமக்களால் நேற்று முற்பகல் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், திருகோணமலை பகுதியைச் சேர்ந்த சிவில் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள்மற்றும்பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும்கலந்து கொண்டனர். (ம-7,9)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 13/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1568
வெற்றி இலக்கங்கள்: விருச்சிகம் 8 9 6 9 8 5
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.05.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1143
Q 08 11 23 71

### கொவிசெத

திகதி 2023.05.13 | சீட்டிழுப்பு இலக்கம் 3355
ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கங்கள் 12 41 57 64
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 13/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1461
K 18 | 19 33 68 76

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.13
சீட்டிழுப்பு இலக்கம் 422
கடகம் 10 15 31 53 கடகம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/05/13
சீட்டிழுப்பு இலக்கம் 5113
N 9 3 4 1 9 8
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2087 | நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.13 | தினம் சனிக்கிழமை
Q 16 22 51 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,907,620/-
DLB

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.13
வெற்றி வாரம்: 4248
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.44,799,842.10
வெற்றி இலக்கங்கள் 05 15 37 60 | A
DLB

### ராசி

சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 3,551,221.20
திகதி 2023-05-13
வெற்றி வாரம் 3799
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 14 27 57 59 | கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,823,601.20
DLB

### லக்பதி

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 36 22 28 51 61
சீட்டிழுப்பு வாரம் 1263 | சிவப்பு | 2023.05.13 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 329,496,130.60
DLB

### சம்பத வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 593 | திகதி 2023-05-13 | வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 22 48 64 | விதி எண் 06
எதிர்வரும் சுப்பர்பரிசுத்தொகை ரூ. 19,732,376.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### அட கோடிபதி ADA KOTIPATHI

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 1913
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2023.05.13
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.50,227,858.20
வெற்றி இலக்கங்கள் 25 26 38 77 | Q
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

**IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH**

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(15247)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

# BIOLOGY CLASSES

2023, 2024 மாணவர்களுக்கான

Group & Personal Classes தமிழ் & English medium

(C-6549)

**077 828 0900**

# VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



(15337)

**077 544 8503**

# வீடு வாடகைக்கு

யாழ் நகரை அண்டிய பகுதியில்
**3 Rooms, kitchen,2 Halls, 2 Bath Rooms, Parking** வசதியுடன் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்

(16081)

**077 366 9770**

# தேவை

- கச்சேரியை அண்டிய பகுதிகளில் 2 பரப்பு காணிகள் தேவை.
- யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீடுகள் வாடகைக்குத் தேவை.
- வைமன் றோட்டில் 2 பரப்பு 15 குளி காணி விற்பனைக்குண்டு.

(C-6539)

**077 603 3259**

# வேலைவாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் FANCY SHOP ஒன்றில் பணி புரிய விரும்புபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

(15515)

**077 725 1036**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 84 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் ரூபாய் (1000,000/=).



**076 911 9371, 076 739 0413, 077 874 8135**

(15512)

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 1987ம் ஆண்டு பிறந்த (மீனம் ராசி, உத்திரட்டாதி நட்சத்திரம்) மணமகனுக்கு மணமகள் தேவை.

(15507)

**076 060 6232**
**071 658 7658**

# விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள தகர கொட்டில், கல்வி நிலைய தளபாடங்கள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு (C-6549)

**077 828 0900**

# வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகாமையில் A9 வீதி முகப்பாகக் கொண்ட சகல வசதிகளுடன் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு

(15514)

**011 272 9262**

# மணமகள் தேவை

15/01/1987 ல் பிறந்த வவுனியா இந்து உயர் கௌரவ குடும்பம் (பெயர்: T.கௌதம்) பி.நேரம் :அதிகாலை 4.55 மணிக்கு.மிதுனம் (புனர்பூசம்) உடைய மணமகனுக்கு அழகிய நற்குணமுள்ள மணமகள் தேவை.

Computer Engineer, அவுஸ்ரேலியாவில் பணிபுரிகிறார் (C-6540)

**077 907 3437**




# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கணேசு நடராசா

(உரிமையாளர் -
நெல்லியடி ஹப்பி ரெக்ஸ்ரைல்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1962.03.26 | 2022.04.25 |

ஆண்டு ஒன்று கடந்தாலும்
அழியாது உங்கள் திருவுருவம்
எம் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நம் கண்ணில் ஒளியாய் என்றும் இருப்பாய் ஐயா!

மீளாத் துயில் கொண்டு எம்மை எல்லாம்
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற
எம் பாசமிகு குலவிளக்கே
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி
உன் பாதம் துதிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நெல்லியடி

சகோதரன், சகோதரிகள், குடும்பத்தினர்
077 832 9458, 078 123 4666

(C-6541)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.